பள்ளிக் கல்வித் துறை

# முதன்மைக் கல்வி அலுவலர்

## சென்னை மாவட்டம்

## கற்றல் கையேடு

## 12-ஆம் வகுப்பு

# வரலாறு

2023–2024

# கற்றல் கையேடு

பன்னிரெண்டாம் வகுப்பு வரலாறு பாடத்தில் மாணவர்களுக்கென தனித்துவமான ஒரு கையேட்டினை வெளிக்கொணரும் நல் வாய்ப்பை வழங்கிய **மதிப்பிற்குரிய சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்** அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் கற்றல் கையேடு மெல்லக் கற்கும் மாணாக்கர்களுக்காகவே சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கையேட்டினை முறையாகவும், முழுமையாகவும் பயிற்சி மேற்கொண்டு அரசுப் பொதுத் தேர்வில் நிறைவான மதிப்பெண்கள் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும்.

## "உன்னால் முடியும்..."

**"தேர்ச்சி என்பதை விட சாதனை என்பதே நமக்கு (வரலாற்றுக்கு) பெருமை"**

# கையேடு உருவாக்கக் குழு


**திரு. கு.அண்ணாமலை**, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
முதுகலை ஆசிரியர்,
லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

**திருமதி. ந.கோயில் ரதி**, எம்.ஏ., பி.எட்.,
முதுகலை ஆசிரியை,
பென்டிக் மகளிர் மேல்நிலைப்பள்ளி,
வேப்பேரி, சென்னை - 600 007.

**திரு. ச.பிரேம்குமார்**, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
முதுகலை ஆசிரியர்,
இ.எல்.எம். பெப்ரிசியஸ் மேல்நிலைப் பள்ளி,
புரசைவாக்கம், சென்னை - 600 007.

# பொருளடக்கம்


| வரிசை எண் | வினா விடைகள் | பக்கம் |
|---|---|---|
| I. | 1 மதிப்பெண் வினா - விடை | 4 - 13 |
| II. | 2 மதிப்பெண் (குறிப்பு வரைக) | 14 - 19 |
| III. | 3 மதிப்பெண் (சுருக்கமான விடை) | 20 - 26 |
| IV. | 5 மதிப்பெண் (விரிவான விடை) | 27 - 39 |
| V. | காலக்கோடு | 40 - 44 |
| VI. | வரைபடம் | 45 - 48 |

# +2 வரலாறு

## '1' மதிப்பெண் வினா - விடை

*I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

*1. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?*

(அ) 1825 (ஆ) 1835
(இ) 1845 (ஈ) 1855

2. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.

(அ) வில்லியம் ஜோன்ஸ் (ஆ) சார்லஸ் வில்கின்ஸ்
(இ) மாக்ஸ் முல்லர் (ஈ) அரவிந்த கோஷ்

*3. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - எனக் கூறியவர்.*

(அ) பால கங்காதர திலகர் (ஆ) தாதாபாய் நௌரோஜி
(இ) சுபாஷ் சந்திர போஸ் (ஈ) பாரதியார்

*4. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.*

| | | | |
|---|---|---|---|
| (அ) | பால கங்காதர திலகர் | – | (1) இந்தியாவின் குரல் |
| (ஆ) | தாதாபாய் நௌரோஜி | – | (2) மெட்ராஸ் டைம்ஸ் |
| (இ) | மெக்காலே | – | (3) கேசரி |
| (ஈ) | வில்லியம் டிக்பை | – | (4) இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள் |

(அ) 2, 4, 1, 3 (ஆ) 3, 1, 4, 2
(இ) 1, 3, 2, 4 (ஈ) 4, 2, 3, 1

*5. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்.*

(அ) சுரேந்திரநாத் பானர்ஜி (ஆ) பக்ருதீன் தியாப்ஜி
(இ) A.O.ஹியூம் (ஈ) W.C. பானர்ஜி

*6. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்.*

(அ) பால கங்காதர திலகர் (ஆ) M. K. காந்தி
(இ) தாதாபாய் நௌரோஜி (ஈ) சுபாஷ் சந்திர போஸ்

*7. "இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" (Poverty and Un-British Rule in India) என்ற நூலை எழுதியவர்.*

(அ) பால கங்காதர திலகர்
(ஆ) கோபால கிருஷ்ண கோகலே
(இ) தாதாபாய் நௌரோஜி
(ஈ) எம்.ஜி. ரானடே

8. *பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?*

(அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்த மடம்
(ஆ) G.சுப்ரமணியம் – விடிவெள்ளிக் கழகம்
(இ) மிண்டோ பிரபு – பல்கலைக்கழகச் சட்டம், 1904
(ஈ) தீவிர தேசியவாத மையம் – சென்னை

9. *பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

*கூற்று : வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.*

காரணம் : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.

(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால், காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி; காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

10. *சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?*

(அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.
(ஆ) பாரதி திலகரின் Tenets of New Party என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்
(இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.
(ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

11. *தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?*

(அ) திலகர் (ஆ) அன்னிபெசண்ட்
(இ) பி.பி. வாடியா (ஈ) எச்.எஸ். ஆல்காட்

12. *கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?*

(அ) லாலா லஜபதிராய் (ஆ) ஏ.சி. மஜும்தார்
(இ) லாலா ஹர்தயாள் (ஈ) சங்கர்லால் பாங்கர்

13. *காந்தியடிகளின் அரசியல் குரு யார்?*

(அ) திலகர் (ஆ) கோகலே
(இ) W.C. பானர்ஜி (ஈ) M.G. ரானடே

14. *தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்.*

(அ) கேதா (ஆ) தண்டி
(இ) சம்பரான் (ஈ) பர்தோலி

15. *சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது?*

(அ) சைமன் குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.
(ஆ) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை.
(இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.
(ஈ) அது முழுச் சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

16. *இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?*

**(அ) டிசம்பர் 31, 1929** (ஆ) மார்ச் 12, 1930
(இ) ஜனவரி 26, 1930 (ஈ) ஜனவரி 26, 1931

17. *பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?*

**(அ) பஞ்சாப் துணை ஆளுநர் – (1) ரெஜினால்டு டையர்**
(ஆ) தலித் - பகுஜன் இயக்கம் – (2) டாக்டர்.அம்பேத்கர்
(இ) சுயமரியாதை இயக்கம் – (3) ஈ.வெ .ரா. பெரியார்
(ஈ) சத்தியாகிரக சபை – (4) ரௌலட் சட்டம்

18. *பின்வரும் நிகழ்வுகளைச் சரியான கால வரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.*

(i) கேதா சத்தியாகிரகம்
(ii) சம்பரான் இயக்கம்
(iii) பிராமணரல்லாதார் இயக்கம்
(iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்

(அ) ii, iii, i, iv **(ஆ) iii, ii, i, iv**
(இ) ii, i, iv, iii (ஈ) ii, i, iii, iv

19. *பின்வருவனவற்றுள் எது/எவை சரியானவை அல்ல.*

(i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார் .
(ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்.
(iii) சைமன் குழுவினை முஸ்லீம் லீக் வரவேற்றது.
(iv) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.

(அ) i (ஆ) i மற்றும் iv
(இ) ii மற்றும் iii **(ஈ) iii மட்டும்**

20. *கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்ய கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர் யார்?*

**(அ) இராஜாஜி** (ஆ) சித்தரஞ்சன் தாஸ்
(இ) மோதிலால் நேரு (ஈ) சத்தியமூர்த்தி

21. *காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு.*

**(அ) ஏப்ரல் 6, 1930** (ஆ) மார்ச் 6, 1930
(இ) ஏப்ரல் 4, 1939 (ஈ) மார்ச் 4, 1930

22. *கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?*

(அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன்
(ஆ) வங்காள சபை
**(இ) இந்தியக் குடியரசு இராணுவம்**
(ஈ) இவற்றில் எதுவுமில்லை

**23. *கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்?***

| | |
|---|---|
| (அ) புலின் தாஸ் | (ஆ) சச்சின் சன்யால் |
| (இ) ஜதீந்திரநாத் தாஸ் | (ஈ) பிரித்தி வதேதார் |

**24. *முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு.***

(அ) 1852 (ஆ) 1854 (இ) 1861 (ஈ) 1865

**25. *முதலாவது பயணிகள் இரயில் 1853இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?***

| | | |
|---|---|---|
| (அ) மதராஸ் | – | அரக்கோணம் |
| (ஆ) பம்பாய் | – | பூனா |
| (இ) பம்பாய் | – | தானே |
| (ஈ) கொல்கத்தா | – | ஹூக்ளி |

**26. *கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு.***

(அ) 1855 (ஆ) 1866 (இ) 1877 (ஈ) 1888

**27. *பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?***

| | |
|---|---|
| (அ) எம்.என். ராய் | (ஆ) பகத்சிங் |
| (இ) எஸ்.ஏ. டாங்கே | (ஈ) ராம் பிரசாத் பிஸ்மில் |

**28. *முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?***

| | |
|---|---|
| (அ) உருது | (ஆ) இந்தி |
| (இ) மராத்தி | (ஈ) பாரசீகம் |

**29. *லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம்பெற்ற முதல் இந்தியர் _________***

| | |
|---|---|
| (அ) ரஹமத்துல்லா சயானி | (ஆ) சர் சையது அகமது கான் |
| (இ) சையது அமீர் அலி | (ஈ) பஃருதீன் தயாப்ஜி |

**30. *காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது.***

| | |
|---|---|
| (அ) 22 டிசம்பர், 1940 | (ஆ) 5 பிப்ரவரி, 1939 |
| (இ) 23 மார்ச், 1937 | (ஈ) 22 டிசம்பர், 1939 |

**31. *பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.***

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| (அ) அன்னிபெசண்ட் | – (1) | அலிகார் இயக்கம் |
| (ஆ) சையது அகமது கான் | – (2) | தயானந்த சரஸ்வதி |
| (இ) கிலாபத் இயக்கம் | – (3) | பிரம்ம ஞான சபை |
| (ஈ) சுத்தி இயக்கம் | – (4) | அலி சகோதரர்கள் |

| | |
|---|---|
| (அ) 3, 1, 4, 2 | (ஆ) 1, 2, 3, 4 |
| (இ) 4, 3, 2, 1 | (ஈ) 2, 3, 4, 1 |

32. *எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?*

(அ) 25 டிசம்பர், 1942 (ஆ) 16 ஆகஸ்ட், 1946

(இ) 21 மார்ச், 1937 (ஈ) 22 டிசம்பர், 1939

33. *வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர்*

(அ) லின்லித்கோ (ஆ) பெதிக் லாரன்ஸ்

(இ) மௌண்ட்பேட்டன் (ஈ) செம்ஸ்ஃபோர்டு

34. *தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?*

(அ) மார்ச் 23, 1940 (ஆ) ஆகஸ்ட் 8, 1940

(இ) அக்டோபர் 17, 1940 (ஈ) ஆகஸ்ட் 9, 1942

35. *சுபாஷ் சந்திரபோஸ் எந்த ஆண்டு காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார்?*

(அ) 1938 (ஆ) 1939

(இ) 1940 (ஈ) 1942

36. *மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின்போது அழைப்பு விடுத்தார்?*

(அ) சட்ட மறுப்பு இயக்கம் (ஆ) ஒத்துழையாமை இயக்கம்

(இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் (ஈ) இவை அனைத்தும்

37. *வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?*

(அ) உஷா மேத்தா (ஆ) பிரீத்தி வதேதார்

இ) ஆசப் அலி (ஈ) கேப்டன் லட்சுமி

38. *இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?*

(அ) ஜவஹர்லால் நேரு (ஆ) மோதிலால் நேரு

(இ) இராஜாஜி (ஈ) சுபாஷ் சந்திர\போஸ்

39. *1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரசபிரதிநிதி யார்?*

(அ) வேவல் பிரபு (ஆ) லின்லித்கோ பிரபு

(இ) மௌண்ட்பேட்டன் பிரபு (ஈ) வின்ஸ்டன் சர்ச்சில்

40. *இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?*

(அ) ஜெர்மனி (ஆ) ஜப்பான்

(இ) பிரான்ஸ் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

41. *இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப் பிரிவின் பெயர் ____________ ஆகும்.*

(அ) சுபாஷ் படைப்பிரிவு (ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு

(இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு (ஈ) ஜான்சி ராணி படைப்பிரிவு

42 *சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தைச் சுபாஷ் சந்திரபோஸ் எங்கு ஏற்படுத்தினார்?*

(அ) இரங்கூன் (ஆ) மலேயா

(இ) இம்பால் **(ஈ) சிங்கப்பூர்**

43. *இந்திய தேசிய இராணுவப் படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது?*

**(அ) செங்கோட்டை, புதுடெல்லி** (ஆ) பினாங்

(இ) வைஸ்ரீகல் லாட்ஜ், சிம்லா (ஈ) சிங்கப்பூர்

44. *1946 இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?*

**(அ) ஜவஹர்லால் நேரு** (ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

(இ) ராஜேந்திர பிரசாத் (ஈ) வல்லபாய் படேல்

45. *இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?*

(அ) வின்ஸ்டன் சர்ச்சில் (ஆ) மௌண்ட்பேட்டன் பிரபு

**(இ) கிளமண்ட் அட்லி** (ஈ) F. D. ரூஸ்வெல்ட்

46. *பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?*

(அ) ஆகஸ்ட் 15, 1947 (ஆ) ஜனவரி 26, 1950

**(இ) ஜூன், 1948** (ஈ) டிசம்பர், 1949

47. *மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் __________*

**(அ) ஜனவரி 30, 1948** (ஆ) ஆகஸ்ட் 15, 1947

(இ) ஜனவரி 30, 1949 (ஈ) அக்டோபர் 2, 1948

48. *ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர்.*

(அ) பொட்டி ஸ்ரீராமுலு **(ஆ) பட்டாபி சீத்தாராமையா**

(இ) கே.எம். பணிக்கர் (ஈ) டி. பிரகாசம்

49. *அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்*

(அ) இராஜேந்திர பிரசாத் **(ஆ) ஜவகர்லால் நேரு**

(இ) வல்லபாய் படேல் (ஈ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

50. *பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியிலிருந்து தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்தது?*

(அ) அமேதி **(ஆ) பம்பாய்**

(இ) நாக்பூர் (ஈ) மகவ்

51. *அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?*

(அ) மார்ச் 22, 1949 (ஆ) ஜனவரி 26, 1946

**(இ) டிசம்பர் 9, 1946** (ஈ) டிசம்பர் 13, 1946

52. *அரசமைப்பு எப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டது?*

(அ) ஜனவரி 30, 1949 (ஆ) ஆகஸ்ட் 15, 1947

(இ) ஜனவரி 30, 1949 (ஈ) நவம்பர் 26, 1949

53. *மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்*

(அ) காஷ்மீர் (ஆ) அஸ்ஸாம்

(இ) ஆந்திரா (ஈ) ஒரிஸா

54. *இந்திய அரசாங்கம் __________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.*

(அ) முதலாளித்துவ (ஆ) சமதர்ம

(இ) தெய்வீக (ஈ) தொழிற்சாலை

55. *இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது ?*

(அ) 1951 (ஆ) 1952

(இ) 1976 (ஈ) 1978

56. *நில சீர்த்திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக எப்போது நடைமுறைப்படுத்தப்பட்டது ?*

(அ) 1961 (ஆ) 1972

(இ) 1976 (ஈ) 1978

57. *பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்.*

(அ) ராம் மனோகர் லோகியா (ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

(இ) வினோபா பாவே (ஈ) சுந்தர் லால் பகுகுணா

58. *தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?*

(அ) 1951 (ஆ) 1961

(இ) 1971 (ஈ) 1972

59. *மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது ?*

(அ) 2005 (ஆ) 2006

(இ) 2007 (ஈ) 2008

60. *எந்த ஆண்டு இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்தன?*

(அ) 1961 (ஆ) 1991

(இ) 2008 (ஈ) 2005

61. *1951 ஆம் ஆண்டில் இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?*

(அ) 5 (ஆ) 7

(இ) 6 (ஈ) 225

62. *வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது?*

(அ) மார்க்கோபோலோ (ஆ) ரோஜர் பேக்கன்

(இ) கொலம்பஸ் (ஈ) பார்தோலோமியோ டயஸ்

63. *நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?*

(அ) அரிஸ்டாட்டில் (ஆ) பிளாட்டோ

(இ) ரோஜர் பேக்கன் (ஈ) லாண்ட்ஸ்டெய்னர்

64. *மனிதகுலத்தை சமயமரபு அல்லது அதிகாரம் மூலமாக ஆட்சி செலுத்தாமல் காரணங்கள் மூலம் ஆட்சி செலுத்தவேண்டும் என்று விரும்பியவர் யார்?*

(அ) தாந்தே (ஆ) மாக்கியவல்லி

(இ) ரோஜர் பேக்கன் (ஈ) பெட்ரார்க்

65. *கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?*

(அ) வர்ஜின் ஆஃப் ராக்ஸ் (ஆ) இறுதி விருந்து

(இ) மோனலிசா (ஈ) மடோனாவும் குழந்தையும்

66. *போப்பாண்டவரால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தை நவீனமயமாக்கியவர் யார்?*

(அ) டோனடெல்லா (ஆ) ரபேல்

(இ) லியானர்டோ டாவின்சி (ஈ) மைக்கேல் ஆஞ்சிலோ

67. *கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருத்தப்படவில்லை?*

(அ) மார்லோவ் – டிடோ

(ஆ) ஷேக்ஸ்பியர் – கிங் லியர்

(இ) பிரான்சிஸ் பேக்கன் – நோவும் ஆர்கனும்

(ஈ) ரோஜர் பேக்கன் – டெக்கமரான்

68. *மெகல்லனின் மறைவுக்குப் பிறகு எந்தக்கப்பல் திரும்பியது?*

(அ) சாண்டாமரியா (ஆ) பிண்ட்டா

(இ) நினா (ஈ) விட்டோரியா

69. *வடஅமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள்.*

(அ) போர்த்துகீசியர் (ஆ) ஸ்பானியர்

(இ) டேனியர் (ஈ) ஆங்கிலேயர்

70. *நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு ______________ என மறுபெயர் சூட்டப்பட்டது.*

(அ) வாஷிங்டன் (ஆ) நியூயார்க்

(இ) சிக்காகோ (ஈ) ஆம்ஸ்டர்டாம்

71. *பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு --------------- இல் நடைபெற்றது.*

(அ) 1775 (ஆ) 1773

(இ) 1784 (ஈ) 1799

72. *அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலபடைகளுக்குத் தலைமை தாங்கியவர்.*

(அ) ரிச்சட்டு லீ (ஆ) ஜார்ஜ் வாஷிங்டன்

(இ) வில்லியம் ஹோவே (ஈ) ராக்கிங்காம்

73. *பாஸ்டில் சிறை தகர்ப்பு ________இல் நடந்தது.*

(அ) 1789, ஜுன் 5 (ஆ) 1789, ஜுலை 14

(இ) 1789, நவம்பர் 11 (ஈ) 1789, மே1

74. *மெக்சிகோவில் புரட்சிக்குத் தலைமையேற்றவர் _________.*

(அ) சைமன் பொலிவர் (ஆ) ஜோஸ் மரியா மோர்லோ

(இ) பெர்டினான்டு டி லெஸ்ஸெப்ஸ் (ஈ) மிகுவல் ஹிடல்கோ

75. *_________ நகரம் 'காட்டன்பொலிஸ்' எனும் புனைப் பெயரைப் பெற்றது.*

(அ) மான்செஸ்டர் (ஆ) லங்காசயர்

(இ) லிவர்பூல் (ஈ) கிளாஸ்கோ

76. *சாசனத்துவவாதிகளின் முக்கியத்துவம் பெற்ற செய்தித்தாள் ________ ஆகும்.*

(அ) ஏழை மனிதனின் பாதுகாவலன் (ஆ) பட்டயம்

(இ) வடக்கத்திய நட்சத்திரம் (ஈ) இல் ரிசார்ஜிமென்டோ

77. *இரண்டாம் சர்வதேசம் ________ நகரில் துவக்கப்பட்டது.*

(அ) பாரிஸ் (ஆ) பெர்லின்

(இ) லண்டன் (ஈ) ரோம்

78. *"இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் _____ ஆவார்.*

(அ) சார்லஸ்ஆல்பிரட் (ஆ) பிஸ்மார்க்

(இ) மூன்றாம் நெப்போலியன் (ஈ) கரிபால்டி

79. *பிராங்கோ-பிரஷ்யப் போர் உருவாகக் காரணமாக விளங்கியது ________ ஆகும்.*

(அ) காஸ்டெய்ன் மாநாடு (ஆ) எம்ஸ் தந்தி

(இ) பிரேக் உடன்படிக்கை (ஈ) அல்சேஸ், லொரைன் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதில் எழுந்த சர்ச்சை

80. *ஜெர்மனியின் முன்னேறி வந்து கொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?*

(அ) மார்னே போர் (ஆ) டானென்பர்க் போர்

(இ) வெர்டுன் போர் (ஈ) சோம் போர்

81. *எந்த நாடு 21 நிர்ப்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?*

(அ) பிரான்ஸ் (ஆ) ரஷ்யா

(இ) ஜப்பான் (ஈ) பிரிட்டன்

82. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?

(அ) அவந்தி　　(ஆ) ப்ராவ்தா

(இ) மார்க்சிஸ்ட்　　(ஈ) மெய்ன் காம்ப்

83. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் --------------------- ஆவார்.

(அ) யாமமோடோ　　(ஆ) ஸ்கூஸ்னிக்

(இ) இரண்டாம் கெய்சர் வில்லியம்　　(ஈ) ஹிரோஹிடோ

84. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழி நடத்தியவர் ________ ஆவார்.

(அ) மெக்ஆர்தர்　　(ஆ) ஐசன்ஹோவர்

(இ) ஜெனரல் டி கால்　　(ஈ) ஜார்ஜ் மார்ஷல்

85. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது ___________ என்னுமிடத்தில் ஆகும்.

(அ) போட்ஸ்டாம்　　(ஆ) எல் அலாமின்

(இ) ஸ்டாலின்கிராட்　　(ஈ) மிட்வே

86. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்.

(அ) பெர்னாட் பரூச்　　(ஆ) ஜார்ஜ் ஆர்வெல்

(இ) ஜார்ஜ் கென்னன்　　(ஈ) சர்ச்சில்

87. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக்கியவர் ஆவார்.

(அ) ஆல்பிரட் சாவே　　(ஆ) மார்ஷல்

(இ) மோலோடோவ்　　(ஈ) ஹாரி ட்ரூமன்

88. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ________ல் நடைபெற்றது.

(அ) பெல்கிரேடு　　(ஆ) பெய்ஜிங்

(இ) பாண்டுங்　　(ஈ) பாலி

89. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் உருவானது.

(அ) 100 உறுப்பினர்களுடன்　　(ஆ) 72 உறுப்பினர்களுடன்

(இ) 51 உறுப்பினர்களுடன்　　(ஈ) 126 உறுப்பினர்களுடன்

90. கிளாஸ்நாஸ்ட் குறிப்பது __________ .

(அ) ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை

(ஆ) சோவியத் கம்யூனிச கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை

(இ) சோவியத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை

(ஈ) பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதை

✡ ✡ ✡ ✡ ✡

# +2 வரலாறு

# ‘2’ மதிப்பெண் வினா - விடை

## (சுருக்கமான வினா - விடை)

1. *தேசியம் என்றால் என்ன?*

❖ “தேசியம்” என்பது ஒரு நாட்டிற்கு “விசுவாசமாகவும்”, “பக்தியோடும்” இருத்தல் எனப் பொருள்.

❖ தனது நாட்டை ஏனைய நாடுகளை காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்ப்பதாகும்.

❖ தனது நாட்டின் பண்பாடும் மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்பு கவனம் செலுத்தும் ஒரு “தேசிய உணர்வு” ஆகும்.

2. *புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.*

❖ இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர்.

❖ வறட்சி, பஞ்சம் போன்ற நிகழ்வுகளை கணக்கில் கொள்ளாமல் நிலவரியை பணமாக கணக்கிட்டு நிர்ணயம் செய்தனர்.

❖ “நிலம்” விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டது.

❖ “வேளாண்மை” வணிக மயமாக்கப்பட்டது.

3. *“இல்பர்ட் மசோதா”வின் முக்கியத்துவத்தை விவாதி?*

❖ ரிப்பன் அரசப்பிரதிநிதியாக இருந்தபோது “இல்பர்ட் மசோதா” இயற்றப்பட்டது.

❖ இதன் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்றனர்.

❖ ஆனால் ஐரோப்பியர்களின் எதிர்ப்பினால் மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டன.

4. *நவீன கல்வியில் சமயப்பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக?*

❖ இந்திய மக்களிடையே நவீனக் கல்வியை கற்றுத்தர கிறித்துவ சமய பரப்பு நிறுவனங்கள் முயற்சி எடுத்தன.

❖ மரபு சார்ந்த கல்வி முறையில் கல்வி கற்பதற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்களுக்கு கல்வி வாய்ப்பினை வழங்கின.

❖ நவீன மதசார்பற்ற கல்வியின் மூலமாக “கிறித்துவத்தை” போதித்தன.

5. *ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்தக் கோரிக்கைகள் என்ன?*

❖ “ரயத்துவாரி”, “ஜமீன்தாரி முறை”கள் வேளாண் வர்க்கத்தினரைக் கடும் துன்பங்களுக்கு உள்ளாக்கியதை சுட்டிக்காட்டியது.

❖ “பண்டைய கிராம முறை” மீட்டெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியது.

❖ நீதித்துறை தாமதமாக செயல்படுவதாகவும், குறைபாடுகளுடையதாகவும் இருப்பதாக கூறப்பட்டது.

6. *மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" (The Medicant Policy) என்றால் என்ன ?*

- ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனுச் சமர்ப்பித்தல் போன்றவை "இறைஞ்சுதல் கொள்கை" எனப்படுகிறது.
- இக்கொள்கையை "தீவிர தேசியவாதிகள்" கடுமையாக விமர்சித்தனர்.

7. *பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.*

- பாலகங்காதர திலகர்
- பிபின் சந்திர பால்
- லாலா லஜபதி ராய்
- அரவிந்த கோஷ்

8. *தீவிர தேசியவாதம் 1908-க்குப் பின்னர் ஏன் குறைந்தது?*

- தீவிர தேசியவாதிகளால் எந்த ஒரு அரசியல் சார்ந்த அமைப்பையும் உருவாக்க முடியவில்லை.
- முக்கிய தலைவர்கள் கைது செய்து சிறையிலடைத்த அடக்கு முறையே வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாயிற்று.
- புரட்சிகர தேசியவாதத்தின் எழுச்சியால் "தீவிர தேசியவாதம்" 1908-ல் சரிவடைந்தது.

9. *அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிகைகளின் பெயர்களை கூறுக.*

- "நியூ இந்தியா"
- தி காமன் வீல்
- "இந்தியா எவ்வாறு விடுதலைப் போரை முன்னெடுத்தது" ("**How India Wrought for Freedom**").

10. *1915-ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புக்கான சட்டம் பற்றி விவரிக்கவும்.*

- முதல் உலகப் போரின் போது தேசியவாத, புரட்சிகர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இச்சட்டம் "கிரிமினல்" சட்டமாக இயற்றப்பட்டது.
- சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது வழக்குத் தொடர இச்சட்டம் அனுமதித்தது.
- இச்சட்டத்தினை மீறுவோருக்கு மரண தண்டனை, நாடு கடத்துதல் அல்லது 10 ஆண்டுகள் வரையிலான சிறைதண்டனை விதிக்கப்பட்டன.

11. *இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?*

- 1921-இல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவில் மேற்கொண்ட பயணம் புறக்கணிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் விவசாயிகளும், தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

12. *காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர் ?*

- இராஜேந்திர பிரசாத்
- ஆச்சார்ய கிருபாளினி
- மஜாருல் ஹக்
- மஹாதேவ தேசாய்

13. *இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?*

- பல்வேறு சாதி, மதங்கள், பிரதேசங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்குவதற்காக தோற்றுவிக்கப்பட்டது.
- கோபால கிருஷ்ண கோகலே "இந்திய பணியாளர் சங்க"த்தை 1905-இல் நிறுவினார்.

14. *பி.ஆர். அம்பேத்கரால் வழி நடத்தப்பட்ட "மஹத் சத்தியாகிரகம்" பற்றி அறிவது என்ன?*

- ❖ "ஊருணிகள்" மற்றும் "கிணறுகளில்" தண்ணீர் எடுக்க மறுக்கப்பட்ட உரிமைக்கு எதிராகவும்,
- ❖ தீண்டாமை கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர இதனைத் தொடங்கினார்.

15. *காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எது ?*

- ❖ "சத்தியாகிரக பிரச்சாரத்தைக்" கைவிட காந்தியடிகள் உறுதி ஏற்றார்.
- ❖ சிறையில் அடைக்கப்பட்ட பத்தாயிரக்கணக்கான இந்தியர்களை விடுதலை செய்ய இர்வின் ஒப்புக்கொண்டார்.
- ❖ "சட்டமறுப்பு இயக்கத்தின்" முடிவைக் குறிப்பதாக இது அமைந்தது.

16. *புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?*

- ❖ இவர் "சௌரி சௌரா" வழக்கில் *172* விவசாயிகளுக்கு மரணதண்டனை விதித்து பிரசித்தி பெற்றவர்.
- ❖ கான்பூர் சதி வழக்கு நீதிபதி H.E. ஹோம்ஸ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

17. *தனித்தொகுதி முறையினை பற்றி எழுதுக ?*

- ❖ 1909-ஆம் ஆண்டு *மிண்டோ-மார்லி சட்டம்* முஸ்லீம்களுக்கு *தனித்தொகுதி* வழங்கியது.
- ❖ இம்முறையில் *முஸ்லீம்கள்* மட்டுமே *முஸ்லீம் வேட்பாளர்களுக்கு* வாக்களிக்க முடியும்.
- ❖ இது *இந்துக்கள்* மற்றும் *முஸ்லீம்களை* முழுமையாக அந்நியப்படுத்தியது.

18. *லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?*

- ❖ லாகூர் மாநாட்டில் *"லாகூர் தீர்மானத்தை" முஸ்லீம் லீக்* நிறைவேற்றியது.
- ❖ "இஸ்லாமியர்களுக்கான தனி நாடு" என்ற கோரிக்கையை லாகூர் தீர்மானம் வலியுறுத்தியது.
- ❖ இத்தீர்மானத்தின் மூலம் *தனிநாடு கோரிக்கை* ஒரு முக்கியக் கட்டத்தை எட்டியது.

19. *கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?*

- ❖ *டொமினியன் அந்தஸ்து* வழங்குவதென்பது ஏமாற்றமளிக்க கூடியதாக இருந்தது.
- ❖ *அரசியல்* சாசன வரைவுக்குழுவில் பங்கெடுக்கும் *பிரதிநிதிகள் நியமிக்கப்படுவார்கள்* என்பதை *காங்கிரஸ் நிராகரித்தது.*
- ❖ *இந்திய பிரிவினைப் பற்றி* (பாகிஸ்தான்) குறிப்பிடப்பட்டிருந்ததை *காங்கிரஸ் நிராகரித்தது.*

20. *கேப்டன் மோகன்சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார் ?*

- ❖ *ஜப்பானின்* கட்டுப்பாட்டில் இருந்த *போர் கைதிகள் அனைவரும்* மோகன் *சிங் தலைமையின் கீழ்* விடப்பட்டனர்.
- ❖ *ஜப்பானிடம் சிங்கப்பூர்* வீழ்ந்ததால் மேலும் பல *போர் கைதிகள் கேப்டன்* மோகன் *சிங்கின்* கட்டுப்பாட்டில் விடப்பட்டனர்.
- ❖ *மோகன் சிங்* கட்டுப்பாட்டில் இருந்த *45,000 வீரர்களில் 40,000 பேரைத்* தேர்ந்தெடுத்து 1942இல் *இந்திய தேசிய இராணுவத்தை* ஏற்படுத்தினார்.

## 21. "இணைப்புறுதி ஆவணம்" பற்றி நீவிர் அறிவது யாது ?

- "இணைப்புறுதி ஆவணம்" என்பது ஒரு சட்டப்பூர்வமான ஆவணம்" ஆகும்.
- இது *1935* - இந்திய அரசு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்த ஆவணமே இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின்போது சுதேச அரசர்கள் ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கான ஒப்பந்தமாகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

## 22 அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக?

- அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் *1946* டிசம்பர் *9*-இல் நடைபெற்றது.
- இராஜேந்திர பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- பி.ஆர்.அம்பேத்கர் வரைவுக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 23. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?

- பொருளாதாரத்தை வளர்த்தல்.
- வேளாண் துறையை மேம்படுத்துதல்.
- உற்பத்தித் துறையை விரிவாக்கம் செய்தல்.
- வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல்.
- வறுமையைக் குறைத்தல்.

## 24. சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீ அறிந்ததென்ன ?

- இந்தியா பொருளாதார வளர்ச்சியில் "சமதர்மப் பாதை"யைப் பின்பற்றுகிறது.
- "சமதர்ம பாணியிலான வளர்ச்சி"யின் நோக்கம், ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது, சுரண்டலை ஒழிப்பது, செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை தடுப்பது ஆகும்.
- "சமூக நீதியானது" அனைத்து குடிமக்களும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சம வாய்ப்பை பெறுவதாகும்.

## 25. பிளாரன்ஸின் "மெடிசி குடும்பம்" பற்றி குறிப்பு வரைக ?

- மறுமலர்ச்சிக் காலத்தில் பிளாரன்ஸ் நகரில் சக்தி வாய்ந்த வர்த்தகக் குடும்பமாக "மெடிசி குடும்பம்" திகழ்ந்தது.
- அரசு நிர்வாகத்தை மறைமுகமாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.
- லியானர்டோ டாவின்சி, மைக்கேல் ஆஞ்சிலோ உள்ளிட்ட பல ஓவியக் கலைஞர்களுக்கு "மெடிசி குடும்பம்" ஆதரவு அளித்தது.

## 26. வரலாற்றில் ஜோன் ஆஃப் ஆர்க் மங்கையினை நினைவு கூறப்படுவது ஏன்?

- இங்கிலாந்து பிரான்சு இடையே "நூறாண்டுப் போர்" நடைபெற்றது.
- இப்போரில் பிரெஞ்சு அரசர் 7-ம் சார்லசுக்காக "ஜோன்ஆஃப் ஆர்க்" என்ற இளம்பெண் வீரதீரமாகப் போரிட்டு "ஆர்லியன்ஸ் போரை" வென்றார்.
- இதனால் அவருக்கு "ஆர்லியன்ஸின் பணிப்பெண்" என்ற பட்டம் வழுங்கப்பட்டது.
- பின்னர் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட அவர் சூனியக்காரி என்று கண்டனம் செய்யப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டார்.

## 27. "பாஸ்டன் தேநீர் விருந்து" குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?

- பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்து 100 கிளர்ச்சியாளர்கள் "பாஸ்டன்" துறைமுகத்தில் தேயிலைக் கொண்டு வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறி 342 பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.
- இந்நிகழ்வு "பாஸ்டன் தேநீர் விருந்து" என அழைக்கப்பட்டது.

## 28. *“சாரடோகா போரின்” முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக?*

- ❖ **அமெரிக்க விடுதலைப் போரில் திருப்புமுனையை ஏற்படுத்தியது “சாரடோகா போர்” ஆகும்.**
- ❖ **“சாரடோகா போர்” முனையில் ஆங்கில தளபதி ஜெனரல் பூர்கோய்ன் சரணடைய நிர்பந்திக்கப்பட்டார்.**
- ❖ **ஜார்ஜ் வாஷிங்டன் தனது திட்டமிட்ட “போர் தந்திரங்களின்” வாயிலாக ஆங்கிலப் படைகளை தோற்கடித்தார்.**

## 29. *தொழிற்புரட்சியின் சிறப்புகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.*

- ❖ **தொழிற்புரட்சியின் இன்றியமையாத சிறப்பு “அறிவியல்” தொழிலில் புகுத்தப்பட்டது” தான்.**
- ❖ **இரும்பு, எஃகு ஆகியவற்றின் பயன்பாடு, நிலக்கரி, நீராவி போன்ற ஆற்றலுக்கான புதிய மூலப்பொருள்களின் பயன்பாடு உற்பத்தியை அதிகரிக்கச் செய்தன.**
- ❖ **புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பு, ஆலைமுறை, வேலை பிரிவினைப் போன்ற புதிய முறைகள் அறிமுகம் செய்யப்பட்டன.**
- ❖ **போக்குவரத்திலும் செய்தி தொடர்பிலும் ஏற்பட்ட முன்னேற்றம் பேரளவில் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கியது.**

## 30. *“இரவலர் சட்டங்கள்” பற்றி விவரமாக எழுதுக?*

- ❖ **பிரிட்டனில் “எலிசபெத் அரசி”யின் ஆட்சி காலத்தில் “இரவலர் சட்டங்கள்” இயற்றப்பட்டன.**
- ❖ **இதன் மூலம் வயது முதிர்ந்தோர், நோயாளிகள், ஏழை சிறார்கள், வேலை வாய்ப்பில்லாமல் இருந்தவர்களுக்கு “நிவாரணம்” வழங்கப்பட்டது.**

## 31. *போலியான பொருளாதார “பகட்டுக் காலம்“ பற்றி நீவிர் அறிவதை கூறுக.*

- ❖ **அமெரிக்காவில் 1870 முதல் 1900 வரையிலான காலத்தை “போலியான பொருளாதார பகட்டுக்காலம்” என்று குறிப்பிடுகின்றனர்.**
- ❖ **இக்காலத்தில் 60 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டியது. தொழில்மயத்தின் அதிவேகப் பரவலால், கூலியும் மெய்யாகவே அதிகரித்தது.**
- ❖ **இக் காலத்தில் லட்சக்கணக்கான ஏழை மக்கள் வறுமையான பகுதிகளிலிருந்து அமெரிக்காவிற்கு புலம் பெயர்ந்தனர்.**
- ❖ **சிலரிடம் மட்டுமே அதிகமான செல்வங்கள் குவிந்து கிடப்பது வெளிப்படையாகவே தெரிந்தது.**
- ❖ **வறுமையும், ஏற்றத்தாழ்வும் அன்றாட சமூக வாழ்வின் அங்கமாகவே இருந்தன.**

## 32. *“நிகிலிசம்“ என்றால் என்ன?*

- ❖ **பல்லாண்டுகால கட்டியெழுப்புதலின் வடிவமான சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவம் “நிகலிசமாகும்”.**
- ❖ **இது நாட்டின் அரசு, கிறிஸ்தவ ஆலயம், குடும்பம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை மறுத்தது.**
- ❖ **இதன் நம்பிக்கைகள் “விஞ்ஞான அடிப்படையிலான உண்மையை சுற்றியே” அமைந்திருந்தன.**

## 33. *“மூன்றாவது ரெய்ச்“ என்றால் என்ன ?*

- ❖ **மூன்றாவது ரெய்ச் என்பது ஹிட்லரின் “நாஜி” அரசைக் குறிக்கும்.**
- ❖ **இது ஜெர்மனியில் பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.**

## 34. *அட்லாண்டிக் பட்டயத்தின் சிறப்புக் கூறுகளைப் பட்டியலிடுக?*

- ❖ **மக்களின் ஒப்புதல் இல்லாமல் பிரதேச சீரமைப்புகள் ஏற்படுத்தலாகாது.**
- ❖ **அரசைத் தேர்ந்தெடுக்க முழு உரிமை கொண்டவர்கள் குடிமக்களே.**

❖ அனைத்து நாடுகளுக்கும் வணிக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

❖ தடையில்லாமல் கடல் கடந்து செல்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.

❖ ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நாடுகளை ஆயுதக் குறைப்பதற்கு உட்படுத்துதல்

*35. அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.*

❖ "மத்திய புலனாய்வு முகமை" (C I A) ❖ "தேசிய பாதுகாப்பு கமிட்டி" (K G B).

*36. "கோமின்பார்ம்" குறித்து நீங்கள் அறிவதென்ன?*

❖ அமெரிக்காவின் "மார்ஷல் திட்டத்திற்கு" பதிலாக சோவியத் ரஷ்யா "கோமின்பார்ம்" எனும் அமைப்பை உருவாக்கியது.

❖ இவ்வமைப்பில் ஐரோப்பிய நாடுகளின் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகித்தனர்.

❖ கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுடனான வணிக உறவுகளை தடுக்க இவ்வமைப்பு முயன்றது.

❖ உறுப்பு நாடுகளிடையே கருத்தியல் ரீதியான பொருட்கள் சார்ந்த தொடர்புகளை உருவாக்க முயன்றது.

*37. பனிப்போர் காலக்கட்டத்தைச் சேர்ந்த மறைமுக போர்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.*

(i) கொரியப் போர் (ii) வியட்நாம் போர்

*38. ஹங்கேரியச் சிக்கலின் பின்னணி யாது?*

❖ ஹங்கேரியின் தலைவரான "ரகோசி" 1953-இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

❖ இதனால் "இம்ரே நேகி" என்பவர் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ ஆனால் அவருக்கு அரசாங்கத்தின் ஆதரவு இல்லை, ரஷ்யாவும் ஆதரவு தெரிவிக்கவில்லை.

❖ "ரகோசி" தொடர்ந்து பொதுவுடைமைக் கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

❖ எழுத்தாளர்களும், அறிவார்ந்த மக்களும் ரகோசியை பதவி விலகக் கோரி கிளர்ச்சியைத் தோற்றுவித்தனர்.

*39. ஹூமன் திட்டம் என்றால் என்ன?*

❖ பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச்சரான "ராபர்ட் ஹூமன்" பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் இடையே சமரசம் ஏற்பட்டால் நன்மை பயக்கும் என அறிவித்தார்.

❖ இரு நாடுகளின் நிலக்கரி மற்றும் எஃகு உற்பத்தியை உயர்மட்ட ஆணையத்தின் மூலம் நிர்வகிக்கப்பட வேண்டுமென முன்மொழிந்தார்.

❖ இத்திட்டம் பரஸ்பர ஆர்வத்தை உருவாக்கி இரு நாடுகளையும் தானாகவே இணைத்தது.

*40. பிரெஸ்த்ட்ரோகியா கோட்பாட்டின் பொருட் சுருக்கத்தைக் கூறுக.*

❖ சோவியத் யூனியனில் அதிபர் கோர்பசேவ் "பிரெஸ்த்ட்ரோகியா" எனும் பெயரில் பொருளாதார மாற்றங்களை கொண்டு வந்தார்.

❖ இதன் மூலம் பல நிறுவனங்களின் மீதிருந்த மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை அவர் தளர்த்தினார்.

❖ விவசாயிகள், வணிகர்கள் பொருள் உற்பத்தியாளர்களும் எதை உற்பத்தி செய்வது, எவ்வளவு உற்பத்தி செய்வது, எவ்வளவு விலை வைப்பது என்பதை அவர்களே முடிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

✡ ✡ ✡ ✡ ✡

# +2 வரலாறு

# '3' மதிப்பெண்கள் வினா - விடை

## (குறுகிய வினா - விடைகள்)

### 1. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை" ஆய்க.

- 1835-இல் மெக்காலே "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" வெளியிட்டார்.
- இக்குறிப்புகளில் ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்படுவதற்கு ஆதரவாக வாதிட்டார்.
- இந்தியாவில் "ஆங்கிலக் கல்வி முறை"யை வடிவமைத்தவர் "மெக்காலே" ஆவார்.
- இதன் விளைவாக "ஆங்கில நவீனக் கல்வி"யை வழங்கும் பள்ளிகளும் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.
- இரத்தததிலும், நிறத்திலும் இந்தியராகவும், விருப்பத்தில், கருத்தில், ஒழுக்க நெறிகளில், அறிவில் ஆங்கிலேயராய் இருக்கும் ஒரு மக்கள் பிரிவை உருவாக்க அவர் விரும்பினார்.

### 2. மே 1884-இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக?

- G. சுப்ரமணியம்
- வீரராகவாச்சாரி
- அனந்தா சார்லு
- ரங்கையா
- பாலாஜி ராவ்
- சேலம் இராமசாமி

### 3. 1908-இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவிர் அறிவது யாது?

- 1908-இல் "கோரல் மில்" தொழிலாளர்களின் 'படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் "வ.உ.சிதம்பரம்", "சிவா" ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது.
- தலைவர்களின் உரையால் தூண்டப்பெற்ற கோரல் பருத்தி நூற்பாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- இந்தியாவில் திட்டமிட்டு நடத்தப்பட்ட தொடக்ககால வேலை நிறுத்தங்களில் இதுவும் ஒன்றாகும்.
- முடிவில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டனர்.
- தொழிலாளர்களின் வெற்றி நாட்டிற்கு கிடைத்த வெற்றி என வந்தே மாதரம் இதழ் புகழாரம் சூட்டியது.

### 4. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

- சுதேசி போராட்டக்காரர்களை கொடூரமாக நடத்திய "டக்ளஸ் கிங்ஸ்போர்டு" எனும் ஆங்கில அதிகாரியை கொல்ல திட்டம் தீட்டப்பட்டது.
- ஆனால், அவருக்குப் பதிலாக இரண்டு ஆங்கில பெண்கள் கொல்லப்பட்டனர்.
- அலிப்பூர் குண்டு வெடிப்பால் பிரஃபுல்லா சாக்கி தற்கொலை செய்து கொண்டார்.
- "குதிராம்போஸ்" கொலை குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டார்.
- சிந்தரஞ்சன் தாஸ் வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடினார்.
- பொதுமக்களுக்கு முன்னர் புரட்சிகர தேசிய வாதிகளை கதாநாயகர்களாக சித்தரித்தது.

5. *வ.உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக?*

- 1906-இல் வ.உ. சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக "சுதேசி நீராவி கப்பல் கம்பெனி" ஒன்றை தொடங்கினார்.
- "S.S. கலியா", "S.S. லாவோ" என்னும் இரண்டு நீராவி கப்பல்களை வ.உ.சி. வாங்கினார்.
- பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்ட நாளை "சுதேசி தினமாக" வ.உ.சி. கொண்டாடினார்.
- தூத்துக்குடிக் கடற்கரையில் தினந்தோறும் பொதுக்கூட்டங்களில் பேசினார்.
- மக்களுக்கு சுதேசி இயக்கம் குறித்தும், அந்நியப் பொருள்கள் புறக்கணித்தல் பற்றியும் கற்றுக்கொடுத்தார்.

6. *"ஜாலியன் வாலாபாக் படுகொலை" குறித்து குறிப்பு எழுதுக.*

- "ரௌலட் சட்டத்தை" எதிர்த்து போராட்டம் செய்த சத்தியபால், சாய்புதீன் கிச்லு ஆகியோரைக் கைது செய்தனர்.
- இதனைக் கண்டித்து 1919 ஏப்ரல் 13-இல் அமிர்தசரஸ் நகரில் "ஜாலியன் வாலாபாக்" பகுதியில் அமைதியான வகையில் ஆர்ப்பாட்டம் நடத்த மக்கள் கூடி இருந்தனர்.
- *2000*-க்கு அதிகமான மக்கள் கூடியிருந்த இடத்துக்கு ஒரு குறுகிய வாயில் மட்டுமே இருந்தது.
- அங்கு சிக்கிக்கொண்ட மக்களை குறிவைத்து குண்டுகள் தீரும் வரை சுடுமாறு "ஜெனரல் டையர்" உத்தரவிட்டார்.
- அரசுத் தகவல்களின் படி உயிரிழப்புகள் *379* பேர் என்றது.
- ஆனால் உண்மையில் *1000*-க்கு மேற்பட்டோர் இறந்திருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

7. *மாற்றத்தை விரும்புவர்கள் - மாற்றத்தை விரும்பாதவர்கள் வேறுபடுத்துக?*

**(i) மாற்றம் விரும்புவர்கள் (Pro - Changers)**

- காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்ற சூழலில் சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு ஆகியோர் புதிய வழியில் செயல்பாட்டை அறிவித்தனர்.
- தீவிர அரசியலுக்குத் திரும்ப வேண்டுமென்று விரும்பினர்.
- சட்டப்பேரவையை கைப்பற்றி தேசியவாத உணர்வூட்டி அதன் செயல்பாடுகளை முடக்கம் செய்வதை வெளிப்படுத்தினர்.
- "சுயராஜ்யம் வேண்டுவோர்" மற்றும் "மாற்றம் விரும்புவர்கள்" என்று இந்த குழு அழைக்கப்பட்டது.

**(ii) மாற்றம் விரும்பாதவர்கள் (No-Changers)**

- "எந்த மாற்றமும் தேவையில்லை" என்று இக்குழு வலியுறுத்தியது.
- சட்டப்பேரவை நுழைவை எதிர்த்த இக் குழு "காந்தியடிகளின் வழி"யைப் பின்பற்றியது.
- இந்தக் குழுவுக்கு இராஜாஜி, வல்லபாய் படேல், இராஜேந்திர பிரசாத் ஆகியோர் தலைமை ஏற்றனர்.

8. *சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியா சென் எவ்வாறு திட்டமிட்டார் ?*

- சிட்டகாங்கைக் கைப்பற்றுவதற்காக மறைந்திருந்து தாக்கும் "கொரில்லா பாணி" தாக்குதலை நடத்த திட்டமிட்டனர்.
- அவர்கள்பெரிதும் கிராமங்களிலிருந்து செயல்பட்டனர்.
- 1930-ஏப்ரல் 18-அன்று இரவு "சிட்டகாங் படைத்தளம்" தாக்கி தகர்க்கப்பட்டது.
- மாகாணத்தின் பிற பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தும் முகமாக ரயில்வே, தந்தி, அலுவகங்கள், படைத்தளங்கள், காவல் துறை முகாம்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

9. **தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக?**

- சிங்காரவேலர் "புரட்சிகரத் தேசியவாதப் பாதை"யைத் தேர்ந்தெடுத்தார்.
- தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை திரு.வி.கல்யாண சுந்தரத்துடன் இணைந்து இவர் தோற்றுவித்தார்.
- நாட்டில் முதன் முறையாக "மே மாதம்" முதல் நாளை "மே தினமாக" 1923-இல் கொண்டாடினார்.
- 1928-ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை பொன்மலை, திருச்சிராப்பள்ளியில் ஏற்பாடு செய்ததில் இவர் முக்கிய பங்கு வகித்தார்.

10. *1909ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக?*

- முஸ்லீம்களுக்கு "தனித்தொகுதி" முறையை அறிமுகப்படுத்தியது.
- இந்த முறையில் "முஸ்லிம்கள்" மட்டுமே "முஸ்லிம் வேட்பாளருக்கு" வாக்களிக்க முடியும்.
- வகுப்புவாதத்தை வளர்ப்பதற்கும், பரப்புவரற்கும் தனித்தொகுதி எனும் ஒரு நுட்பத்தை நடைமுறைப்படுத்தியது.
- ஆங்கிலேய மத்திய சட்ட மன்றத்தில் அலுவலரல்லாத *27* உறுப்பினர்களில், "*8* இடங்களை" முஸ்லீம்களுக்கு வழாங்கியது.
- மாகாண சட்டமன்றங்களில் முஸ்லீம் வேட்பாளர்களுக்கு மதராஸ் - *4*, பம்பாய் - *4*, வங்காளம் - *5* என இடங்களை ஒதுக்கியது.

11. *வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக?*

- முஸ்லீம் லீக்
- இந்து மகா சபை
- சிரோமணி அகாலி தளம்

12. *எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் "வெள்ளையனே வெளியேறு இயக்கம்" பற்றி சிந்தித்தார்?*

- "இரண்டாம் உலகப் போரில்" இந்தியர்களின் ஒத்துழைப்பு தேவை என்ற போதும் விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது
- "கிரிப்ஸ் தூதுக்குழு"வோடு ஏற்பட்டிருந்த கசப்பான அனுபவம் காந்தியடிகளையும், நேருவையும் பிரிட்டிஷார் மீது நம்பிக்கை இழக்க வைத்தது.
- 1942-மே 16-இல் கூடிய பத்திரிக்கையாளர் சந்திப்பில் காந்தியடிகள் இதனை வெளிப்படுத்தினார்.
- அதன்பின் அவர் மக்களை நோக்கி "செய் அல்லது செத்துமடி" என்று கூறி தனது மறுப்பியக்கத்தை துவக்கினார்.

13. *காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்?*

- சர்தார் வல்லபாய் படேல் காஷ்மீர் மகாராஜா ஹரிசிங்கிடம் இந்தியாவுடன் இணைய பேச்சு வார்த்தை நடத்தினார்.
- ஆனால் காஷ்மீர் அரசர் இந்தியாவோடு இணைய மறுத்து வந்தார்.
- இந்திய விடுதலைக்குப் பின் பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரை சூறையாடிய போது மகாராஜா ஹரிசிங் அவர்களால் தடுக்க முடியவில்லை
- இந்திய இராணுவம் காஷ்மீருக்கு உதவ அனுப்புவதற்கு முன் காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட வேண்டும் என்பதில் படேல் உறுதியாக இருந்தார்.

## 14. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை ?

- இந்திய குடிமக்களுக்கு "அடிப்படை உரிமைகள்"
- "வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை"
- மக்கள் பிரதிநிதிகளுக்கு "சட்டம் இயற்றும் அதிகாரம்"
- அரசு கொள்கைகளுக்கான "வழிகாட்டு நெறிமுறைகள்"
- சுதந்திரமான "தேர்தல் ஆணையம்"
- நீதித்துறையின் சுதந்திர தன்மையை உறுதி செய்தது.

## 15. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக?

(i) இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று அவற்றின் நில எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்

(ii) இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்

(iii) ஒரு நாடு, மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.

(iv) இரு நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் ஒன்றுக்கொன்று பயனடைவதற்கான கூட்டுறவு.

(v) சமாதான சகவாழ்வு.

## 16. குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை ?

- "குத்தகை"யை முறைப்படுத்துவது
- "குத்தகைதாரர்களின் உரிமைகளை" பாதுகாப்பது
- "நிலவுடையாளர்"களிடமிருந்து "நிலங்களை பறிமுதல்" செய்து அவற்றிற்கான உரிமையை "குத்தகைதாரர்"களுக்கு அளிப்பது.

## 17. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை ?

- இந்தியா "உணவு தானிய உற்பத்தியில்" தன்னிறைவைப் பெற்றது.
- "கோதுமை", "நெல்" ஆகியன அதிகப்படியாக பயிரிடப்பட்டு உற்பத்தி பெருகின.
- மக்களுக்கான "உணவு பாதுகாப்பு" உறுதி செய்யப்பட்டது.
- இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலைகள் வளர்ச்சி பெற்றன.
- நாட்ன் பல பகுதிகளில் மீண்டும் இயற்கை விவசாயத்திற்கு திரும்பும் மனநிலை ஏற்பட்டது.

## 18. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?

**(i) "நிறுவனம் சார்ந்த காரணிகள்**

- நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும், விவசாய தொழிலாளர்கள் வர்க்கத்திற்குள் நிலவிய, சமூக, பொருளாதார உறவில் ஏற்பட்ட குறைபாடுகள்.

**(ii) "தொழில்நுட்பம் சார்ந்த காரணிகள்"**

- சிறந்த விதைகள், மேம்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகள், ரசாயன உரங்கள் பயன்படுத்துதல், டிராக்டர், அறுவடை இயந்திரம், நீர்ப்பாசன வசதிகளை பயன்படுத்துதலில் ஏற்பட்ட குறைபாடுகள் ஆகிய முக்கிய காரணங்கள் ஆகும்.

## 19. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன் ?

- இத்தாலியர்கள் தங்களின் "பாரம்பரியம்" குறித்து பெருமைக் கொண்டார்கள்.
- இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடித்தனர்.
- லத்தீன் மொழியை ரோமானிய மூதாதையர்கள் எழுதியது போன்று அவர்கள் எழுதக் கற்றுக் கொண்டனர்.

- ❖ தாந்தே, பெட்ராக் என்ற இரு இத்தாலிய மொழி கவிஞர்களை பிளாரன்ஸ் நகரம் உருவாக்கியிருந்தது.
- ❖ பிளாரன்ஸில் மெடிசி குடும்பமும், மிலானில் ஸ்ஃபோர்ஸா குடும்பமும் கலைகளை வளர்க்க ஆதரவு அளித்தன.

*20. "அமெரிக்கப் புரட்சி"யின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க ?*

- ❖ "மக்களாட்சி", "குடியரசு" , கூட்டாட்சி போன்ற கோட்பாடுகள் பரவலாயின.
- ❖ "கல்வியின் முக்கியத்துவம்" சிறப்பிடத்தைப் பெற்றது.
- ❖ அரசியல், சமூக மாற்றங்கள் ஜனநாயகத்தையும், சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.
- ❖ "பேச்சு சுதந்திரம்", "மத சுதந்திரம்" மற்றும் "சம வாய்ப்பு" வழங்கப்பட்ட சுதந்திர சமுதாயம் அமைய இப்புரட்சி வழி கோலியது.
- ❖ குடியேறியவர்கள் அனைவருக்கும் அமெரிக்கா சுதந்திரத்தையும், வாய்ப்புகளையும் வழங்கும் நாடானது.
- ❖ குடியேற்ற நாடுகளின் "விடுதலைக் கோரிக்கை" உலகின் பல பகுதிகளில் பரவியது.

*21. "1789-ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் காலத்தில் ஒரு புரட்சி நடந்தது" - விளக்குக.*

**(i) மாண்டெஸ்கியூ**

- ❖ "சட்டங்களின் சாரம்" எனும் தனது நூலில் "அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்".
- ❖ சட்டமியற்றுதல், செயல்படுத்துதல், நீதித்துறை என பிரிக்கப்பட வேண்டுமென கூறினார்.

**(ii) வால்டேர்**

- ❖ "14-ஆம் லூயின் காலம்" என்ற தனது நூலில் "மதம் சார்ந்த மூட நம்பிக்கைகளையும், முடியாட்சியையும்" எதிர்த்தார்.

**(iii) ரூஸோ**

- ❖ "சமூக ஒப்பந்தம்" எனும் நூலில் ஆள்வோர்க்கும், ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்த வேண்டும் என வாதிட்டார்.

**(iv) ஜான் லாக்**

- ❖ "அரசாங்கத்தின் இரு ஆய்வுக் கட்டுரைகள்" எனும் நூலில் தெய்வீக உரிமைக் கோட்பாட்டையும் வரம்பற்ற முடியாட்சியையும் எதிர்த்தார்.

**(v) தீதரோ**

- ❖ "கலைக்களஞ்சியத்தில்" புதிய சிந்தனைகள் கொண்டக் கருத்துகளை வெளியிட்டார்.

*22. ஏழை மக்களும் உழைக்கும் வர்க்கமும் ஏற்றம் பெற பாரிஸ் கம்யூன் எடுத்த நடவடிக்கைகளை விவாதத்திற்கு உட்படுத்துக.*

- ❖ அடுமனையில் இரவுப்பணிக்கு தடை.
- ❖ விதவைகளுக்கு ஓய்வு ஊதியம்.
- ❖ குழந்தைகளுக்கு கட்டணமில்லாக் கல்வி.
- ❖ தொழிற்சாலைகள், பட்டறைகள் ஆகியன உரிமையாளரால் மூடப்பட்டிருந்தால் அதனை தொழிலாளர்களைக் கொண்டு திறக்கப்பட்டன.
- ❖ முற்றுகை காலத்தில் வாங்கப்பட்ட கடன்களை வசூலிக்கவிடாமல் தடுத்தும் கம்யூன் நடவடிக்கையில் இறங்கியது.

## 23. *அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது ?*

- ❖ முதல் உலகப்போரில் படை வீரர்கள் தங்கள் உடலையும், உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத் தோண்டி அதனுள் அடைக்கலம் தேடினர்.
- ❖ படைகளால் தோண்டப்பட்ட அகழிகள், குழிகள் அவர்களை குண்டுகளிலிருந்து பாதுகாத்தன.
- ❖ உலகப்போரை அடையாளப்படுத்தும் அகழி முறையானது எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்ல முடியாதபடி வளைந்து நெளிந்து இருக்கும்படி அகழியை வடிவமைத்தனர்.
- ❖ தொடர் இணைப்பு அகழிகளும் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக உணவு, வெடிப்பொருள்கள், புதிய துருப்புகள், கடிதங்கள், பரிமாற்றம் செய்யப்பட்டன.

## 24. *மிக ஆபத்தான ஹி-படகுகள் மற்றும் னி-கப்பல்கள் பற்றி நீவீர் அறிந்தது என்ன?*

**(i) "U" படகுகள்"**

- ❖ "U" படகுகள்" என்பது முதல் உலகப்போர் காலத்தில் ஜெர்மனி பயன்படுத்திய மிக அச்சுறுத்தும் "நீர் மூழ்கிகள்" ஆகும்.
- ❖ இதனை பயன்படுத்தி பிரிட்டனின் கப்பல்களை மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள்.
- ❖ ஒரே மாதத்தில் 8,80,000 டன்கள் கனத்திற்கு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தன.

**(ii) "Q" கப்பல்கள்"**

- ❖ "Q" கப்பல்கள்" என்பது பிரிட்டன் கையாண்ட "ஒரு மாயபிம்பம்" உத்தியாகும்.
- ❖ இது "ஜெர்மனிக்கான பதிலடி"யாகும்.
- ❖ பிரிட்டன் 200க்கும் மேற்பட்ட நீராவி கப்பல்களையும், சரக்கு படகுகளையும் கொண்டு வாணிப நடவடிக்கையை மேற்கொள்வது போன்ற ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தின.
- ❖ ஜெர்மனியின் 'U' படகுகள் ஏற்படுத்திய ஆபத்துகளை பிரிட்டன் எதிர்கொண்டது.

## 25. *இந்தோனோசியா விடுதலைக்கு சுகர்னோ ஆற்றிய பங்கை மதிப்பிடுக.*

- ❖ "சுகர்னோ" என்ற இளம் பொறியாளர் "இந்தோனேசிய தேசிய கட்சியை" நிறுவினார்.
- ❖ சுகர்னோ, ஹட்டா போன்ற தலைவர்களால் வழி நடத்தப்பட்ட சிலர் விடுதலை அடைய சிறந்த வழி ஜப்பானியர்களை ஆதரிப்பதே என்று கருதினார்கள்.
- ❖ இதன்படி சுகர்னோவின் ஆட்சி நிறுவிய ஜாவா, சுமத்ரா, நீங்கலாக டச்சுக்காரர்கள் மறு ஆக்கிரமிப்பை செய்தனர்.
- ❖ டச்சுக்காரர்கள் சுகர்னோவின் ஆட்சியை அங்கீகரிக்க மறுத்தனர்.
- ❖ பிரிட்டிஷ் அரசு தலையிட்டு "டச்சு - இந்தோனேசியா ஒப்பந்தம்" மேற்கொள்ளச் செய்தது.
- ❖ இதன் விளைவாக ஜாவா, சுமத்ராவை விடுதலைப் பெற்ற குடியரசாக டச்சுக்காரர்கள் ஏற்றுக் கொண்டனர்.
- ❖ இவ்வாறு தீவுகளை கூட்டாட்சி முறையில் இணைத்து "இந்தோனேஷியா ஐக்கிய நாடு" உருவாக்கப்பட்டது.

## 26. *ஐ.நா. சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.*

- ❖ 1943-இல் *"மாஸ்கோ பிரகடனம்"* பன்னாட்டு சங்கத்திற்குப் பதிலாக *"பன்னாட்டு அளவில் ஒரு அமைப்பு"* உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரித்தது.
- ❖ *"யால்டா மாநாட்டில்"* பாதுகாப்பு சபையில் *வாக்களிக்கும் முறை குறித்தும்,* வேறு சில பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

- 1945-இல் *"சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில்"*, *"ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம்"* இறுதி செய்யப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபை *1945-அக்டோபர் 24-இல் "51 உறுப்பினர்களோடு"* உதயமானது.

### 27. நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.

- *"செக்கோஸ்லோவாக்கியா"*வில் *கம்யூனிஸ்டுகள்* பெற்ற வெற்றி *ஐரோப்பிய நாடுகளிடையே* அச்சத்தை அதிகரித்தது.
- இதனால், *மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒரு கூட்டு பாதுகாப்பு தீர்வை* ஏற்படுத்த விருப்பம் கொண்டன.
- 1948-இல் *பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து* போன்ற நாடுகள் *"பிரஸ்ஸல்ஸ்"* நகரில் *சந்தித்து உடன்படிக்கையில்* கையெழுத்திட்டனர்.
- இந்த ஒப்பந்தம் *இராணுவ, அரசியல், பொருளாதாரக் கூட்டு* செயல்பாட்டுக்கு வழிவகுத்தது.
- பின்னர், *அமெரிக்கா, இத்தாலி, கனடா, டென்மார்க், நார்வே* போன்ற நாடுகள் இணைந்து "நேட்டோ" அமைப்பைப் உருவாக்கின.

### 28. நேட்டோவை போல ஏன் சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை?

- *பசிபிக் பிராந்தியத்தில் "நேட்டோவின் பிரதி"*யாக அமைந்த அமைப்பு *"சீட்டோ"* ஆகும்.
- *பிலிப்பைன்ஸ், தாய்லாந்து* தவிர ஏனைய *தென்கிழக்கு ஆசிய நாடுகள் இவ்வுடன்படிக்கையில் பங்கேற்க மறுத்துவிட்டன.*
- *"சீட்டோ"* ஒரு *ஆலோசனை மன்றமாக* மட்டுமே செயல்பட்டது.
- *உள்நாட்டில் ஏற்படும் ஆபத்துக்கான பொறுத்தமட்டில்* சம்பந்தப்பட்ட நாடுகளே அவற்றை *எதிர்கொள்ளவேண்டும்.*
- *"வியட்நாம் போர்"* முடிந்த நிலையில் சீட்டோ கலைக்கப்பட்டது.
- *"சீட்டோ"* அமைப்பானது *"நேட்டோ"வை போல* செல்வாக்கு பெற்ற அமைப்பாக இல்லை.

# +2 வரலாறு

# ‘5’ மதிப்பெண்கள் (விரிவான வினா-விடைகள்)

## 1. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின், செயல்பாடுகள் குறித்து எழுதுக?

### (i) சுதேசி இயக்கம்

- ❖ வங்கப் பிரிவினைக்கு எதிரான இயக்கமாக “சுதேசி இயக்கம்” வளர்ந்தது.
- ❖ திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற சுதேசி இயக்கம் பெரும் கவனத்தையும் ஆதரவையும் பெற்றது.
- ❖ ஆங்கில ஆட்சிக்கு எதிராக தமிழ்நாட்டில் நடைபெற்ற சுதேசி இயக்கம் அனைத்திந்திய பண்புகளை பெற்றிருந்தது.
- ❖ அது தமிழ் உணர்வாலும் பெருமையாலும் ஆதரிக்கப்பட்டது.

### (ii) சுதேசி கூட்டங்கள்

- ❖ மெரினா கடற்கரையில் “சுதேசி கூட்டங்கள்” நடைபெறுவது வழக்கமான காட்சியாயிற்று.
- ❖ பிபின் சந்திரபால் “சென்னைக் கடற்கரை” யில் ஆற்றிய உரைகள் தமிழகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

### (iii) வ.உ.சி.யும் சுதேசி நீராவிக்கப்பல் கம்பெனியும்

- ❖ வ.உ.சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக “சுதேசி கப்பல் கம்பெனி”யைத் தொடங்கினார்.
- ❖ 1906-ல் “சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனிக்கு S.S. கலியா, S.S. லாவோ எனும் இரண்டு கப்பல்களை வாங்கினார்.
- ❖ சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை உருவாக்கியது, திலகர் போன்ற தேசிய தலைவர்களால் பாராட்டு பெற்றது.

### (iv) G. சுப்ரமணியம்

- ❖ செய்திப் பத்திரிகையை பயன்படுத்தி தேசியவாதச் செய்திகளை பரப்புரை செய்த தலைவர்களுள் முதன்மையானவர் G. சுப்ரமணியம் ஆவார்.
- ❖ அவர் “தி இந்து” மற்றும் “சுதேசி மித்ரன்” எனும் பத்திரிகைகளை நிறுவினார்.

### (v) சுப்பிரமணிய பாரதியார்

- ❖ பாரதியாருக்கு தீவிர தேசியவாதிகளின் வழிமுறைகள் அதிகம் ஏற்புடையதாக இருந்தன.
- ❖ 1907-இல் சூரத் சென்று வந்த பயணம் “சென்னை மாகாணத் தீவிர தேசியவாதிகள் குறித்து” எனும் சிறு புத்தகமொன்றை வெளியிட்டார்.
- ❖ பாரதியார் ஆசிரியராக பணியாற்றிய “இந்தியா” என்ற வார இதழ் தீவிர தேசியவாதிகளின் குரலாக மாறியது.

## 2. இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

### (i) வ.உ.சிதம்பரம்

- ❖ 1906-இல் வ.உ.சிதம்பரம் ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்தும் கருத்தை வெளிப்படுத்திய போது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.

**(ii) சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி**

- 1906-இல் வ.உ. சிதம்பரம் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியை தொடங்கி S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவி கப்பல்களை வாங்கினார்.

**(iii) பொதுக் கூட்டங்களில் சுதேசி குறித்து பரப்புரை**

- சூரத் மாநாட்டில் பங்கேற்ற பின்னர் ஊர் திரும்பிய வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து இருவரும் தூத்துக்குடி கடற்கரையில் தினந்தோறும் பொதுக்கூட்டங்களில் பேசினர்.
- மக்களுக்குச் சுதேசி குறித்தும் அந்நியப்பொருள்களை புறக்கணித்தல் பற்றியும் மக்களுக்கு கற்றுக் கொடுத்தனர்.
- ஆயிரக்கணக்கான மக்கள் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

**(iv) கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம்**

- 1908-இல் கோரல் மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல் வ.உ.சி மற்றும் சிவா ஆகியோரின் கவனத்தை கவர்ந்தது.
- தலைவர்களின் உரையால் தூண்டப்பெற்ற நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- முடிவில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தனர்.

**(v) வ.உ.சிதம்பரம், சுப்பிரமணிய சிவா கைது**

- பிபின் சந்திரபால் ஆறுமாத காலச்சிறை தண்டனைக்கு பின்னர் விடுதலை செய்யப்பட்ட நாளை தமிழ்நாட்டுச் சுதேசி இயக்கத் தலைவர்கள் “சுதேசி தினமாக” கொண்டாட முடிவு செய்தனர்.
- திருநெல்வேலியில் சுதேசி தினம் கொண்டாட ஆங்கில அரசு அனுமதி மறுத்ததையும் மீறி வ.உ.சிதம்பரம், சுப்பிரமணிய சிவா, பத்மநாபர் ஆகியோர் செயல்பட்டனர்.
- அவர்கள் 1908-இல் தேச துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர்.

**(vi) வ.உ.சிதம்பரனாருக்கு ஆயுள் தண்டனை**

- வ.உ. சிதம்பரமும், சுப்பிரமணிய சிவாவும் குற்றம் செய்தனர் என அறிவிக்கப்பட்டு தேச துரோகக் குற்றத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர்.
- ஆங்கில அரசுக்கு எதிராகப் பேசிய குற்றத்திற்காக வ.உ. சிதம்பரம் ஒரு ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்றார்.
- சுப்பிரமணிய சிவாவிற்கு உடந்தையாக இருந்ததற்காக வ.உ.சிக்கு 20 ஆண்டுகள் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டன.

### 3. *திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக?*

**(i) திலகரின் தன்னாட்சி இயக்கம்**

- 1916 இல் பெல்காமில் நடந்த பம்பாய் மாகாண மாநாட்டில் திலகரின் தன்னாட்சி இயக்கம் நிறுவப்பட்டது.
- மகாராஷ்டிரா, கர்நாடகா, மத்திய மாகாணங்களில் இது செயல்பட்டது.
- திலகரின் இயக்கத்துக்கு *6* கிளைகள் ஒதுக்கப்பட்டன.

- "தன்னாட்சி குறித்த கோரிக்கை"களை தமது உரைகள் மூலம் திலகர் பிரபலப்படுத்தினார்.
- மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் பிரபலமடைந்த இவ்வியக்கத்தில் 32,000 உறுப்பினர்கள் இருந்தனர்.
- தன்னாட்சி இயக்கத்தை பரப்பியதற்காக திலகர் தனது *60*-வது பிறந்த நாளில் கைது செய்யப்பட்டார்.

### (ii) அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம்

- 1916-ஆம் ஆண்டு மதராஸில் "தன்னாட்சி இயக்கத்தை", "அன்னிபெசன்ட்" தொடங்கினார்.
- இந்தியா முழுவதும் தீவிர பயணம் செய்து தன்னாட்சி குறித்த கருத்தை பரவச் செய்தார்.
- "இந்திய விசுவாசத்தின் விலை, இந்தியாவின் விடுதலை" என்று அறிவித்தார்.
- தேசிய தலைவர்களான ஜவஹர்லால் நேரு, முகம்மது அலி ஜின்னா, சத்தியமூர்த்தி போன்றவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்தனர்.
- இந்த இயக்கத்தின் கூட்டங்களில் மாணவர்கள் கலந்து கொள்ள அரசு தடைவிதித்தது.
- 1917-இல் அன்னிபெசண்ட், பி.பி.வாடியா, ஜார்ஜ் அருண்டேல் போன்ற தலைவர்கள் ஊட்டியில் கைது செய்யப்பட்டனர்.

## *4. ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி?*

### (i) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழல்

- கிலாபத் மாநாட்டில் காந்தியடிகளின் வற்புறுத்தலின் பேரில் 1920 ஆகஸ்ட் 31 முதல் ஒத்துழையாமை இயக்கத்தை தொடர்ந்து முடிவு செய்யப்பட்டது.
- அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு நீதிமன்றங்களை புறக்கணிக்கும் திட்டத்தை அலகாபாத்தில் கூடிய அனைத்துக்கட்சிக் கூட்டம் முடிவு செய்தது.
- 1920ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் சிறப்பு அமர்வில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், அரசு அலுவலகங்கள், அந்நியப் பொருட்களை புறக்கணித்தல், அரசு வழங்கிய பட்டத்தையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைப்பது ஆகியன ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்க்கப்பட்டன.
- 1920ஆம் ஆண்டு நாக்பூரில் நிகழ்ந்த மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### (ii) ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவுகள்

- ஆயிரக்கணக்கான மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளை விட்டு வெளியேறினர்.
- 1921-இல் "வேல்ஸ் இளவரசர்" மேற்கொண்ட பயணம் புறக்கணிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் தொழிலாளர்களும், விவசாயிகளும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- ஆந்திர விவசாயிகள் "ஜமீன்தார்களுக்கு" வழங்க வேண்டிய வரிகளை நிறுத்தி வைத்தனர்.
- அரசு *7* நாட்களுக்குள் சிறைக்கைதிகளை விடுதலை செய்யாவிட்டால் பர்தோலியில் வரிகொடா பிரச்சாரங்கள், சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கப்போவதாக காந்தியடிகள் அறிவித்தார்.

5. *ஒத்துழையாமை இயக்கத்தில் இருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது?*

| | *ஒத்துழையாமை இயக்கம்* | *சட்டமறுப்பு இயக்கம்* |
|---|---|---|
| 1. | ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து 1920-இல் தொடங்கப்பட்டது. | உப்பு மீது விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராக 1930-இல் தொடங்கப்பட்டது. |
| 2. | இந்தியா முழுவதும் பரவியது. அனைத்துப் பிரிவினரும் பங்கு பெற்றனர். | காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து 78 தொண்டர்களுடன் தண்டி யாத்திரை மேற்கொண்டார். |
| 3. | சுதேசிப் பொருள்கள் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அரசு கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள் புறக்கணிக்கப்பட்டன. | உப்பு வரிக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. |
| 4. | வேல்ஸ் இளவரசர் பயணம் புறக்கணிப் பட்டது. பட்டங்களும், விருதுகளும் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. | ஒரு பிடி கையில் எடுத்து காந்தியடிகள் உப்புக்கு வரி செலுத்தும் சட்டத்தை தவிடு பொடியாக்கினார். |
| 5. | சௌரி சௌரா சம்பவத்தால் திரும்பப் பெறப்பட்டன. | காந்தி-இர்வின் ஒப்பந்தத்தால் *முடித்து வைக்கப்பட்டன.* |

6. *பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்குமேடைக்கு இட்டுச் சென்றது?*

**(i) பகத்சிங்**

- ❖ பகத்சிங்கின் 14-ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது.
- ❖ "நவ்ஜவான் பாரத் சபா", "ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன்" ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக் கொண்டார்.

**(ii) பகத்சிங்கின் குண்டுவீச்சு**

- ❖ 1929 ஏப்ரல் 8-இல் பகத்சிங் முயற்சியால் மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசிய நிகழ்வு" நடைபெற்றது.
- ❖ ஆனால் அந்தக் குண்டுகள் எவரையும் கொல்லவில்லை.

**(iii) லாகூர் சதி வழக்கு**

- ❖ பிரிட்டிஷ் காவல் அதிகாரி "சாண்டர்ஸ் கொலை" தொடர்பான விசாரணைக்கு பகத்சிங் மற்றும் அவரது தோழர்கள் உள்பட *21* பேர் கைது செய்யப்பட்டனர்.
- ❖ இது "இரண்டாவது லாகூர் சதி வழக்கு" என்று அறியப்படுகிறது.
- ❖ "லாகூர் சதி" வழக்கின் விசாரணைகள் முடியும் வரை "குண்டுவீச்சு வழக்கின் தீர்ப்பு" ஒத்திவைக்கப்பட்டிருந்தது.
- ❖ லாகூர் வழக்கில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் 1930 அக்டோபர் 7 அன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**(iv) பகத்சிங் தூக்கிலிடப்படுதல்**

- ❖ லாகூர் சிறையில் 1931 மார்ச் 23 அன்று பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- ❖ தங்கள் இறுதி மூச்சு அடங்கும் வரை ஆங்கில அரசுக்கு எதிராக "புரட்சி ஓங்குக" என்று முழங்கியவாறு அவர்கள் தூக்கினை எதிர் கொண்டனர்.

### 7. *வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.*

- ❖ "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தினால் காந்தியடிகள் உட்பட அனைத்து காங்கிரஸ் தலைவர்களையும் *1942* ஆகஸ்ட் *9* அன்று கைது செய்து சிறையில் அடைத்தது.
- ❖ நாடு முழுவதும் கடையடைப்புகளும், வன்முறை மோதலும், தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டங்களும் நடைபெற்றன.
- ❖ காலனிய அரசு பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தின.
- ❖ தொலைத்தொடர்பு, இருப்புப்பாதைகளையும், ரயில் நிலையங்களையும், அரசு அலுவலகங்களையும் நாசமாக்குவதை மக்கள் கைக்கொண்டனர்.
- ❖ இவ்வியக்கத்தினால் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை *91,836* என கணக்கிடப்பட்டன.
- ❖ காவல்துறையின் துப்பாக்கிச்சூட்டில் *1060* பேர் பலியானார்கள்.
- ❖ 208 காவல் கண்காணிப்பு நிலையங்களும், *332* இருப்புப்பாதை நிலையங்களும், *945* அஞ்சல் அலுவலகங்களும் அழிக்கப்பட்டன.

### 8. *"இராஜாஜி திட்டம்" பற்றி ஒரு பத்தி எழுதுக?*

- ❖ 1944-இல் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் சிறையில் இருந்தபோது
- ❖ முஸ்லீம் லீக்கின் தனிநாடு கோரிக்கைக்கு தீர்வு காணும் பொருட்டு இராஜாஜி "ஒரு முன்மொழிவுத் தீர்மானத்தை" வழங்கினார்.
- ❖ உலகப் போருக்குப் பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் மாவட்டங்களைப் பிரித்து எடுப்பது.
- ❖ அங்கு வயதுத் தகுதி அடைந்தோரைக் கொண்டு "வாக்கெடுப்பு" நடத்தி "பாகிஸ்தான் உருவாக்கம்" பற்றி முடிவை எடுத்தல் வேண்டும்.
- ❖ ஒரு வேளை ஓட்டெடுப்பின் முதலில் பிரிவினை உறுதி செய்யப்பட்டால் பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவற்றை பொதுவில் செயல்படுத்த ஒப்பந்தம் ஏற்படுத்துதல் வேண்டும்.
- ❖ எல்லையில் அமையப் பெற்ற மாவட்டங்களுக்கு இரு நாடுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.
- ❖ இத்திட்டங்கள் யாவும் முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் செயல்முறைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
- ❖ காந்தியடிகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் "இராஜாஜி திட்டத்தை" அடிப்படையாகக் கொண்டு முகமது அலி ஜின்னாவோடு ஒரு பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தார்.
- ❖ ஆனால் பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

### 9. *சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக?*

**(i) சுதேச அரசுகளை இணைக்கும் பணி**

- ❖ 1947 ஆகஸ்ட் 15-க்குள் "சுதேச அரசுகளை" இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி விரைவாக முடிக்கப்பட்டது.

- காஷ்மீர், ஜுனாகத், ஹைதராபாத் ஆகிய அரசுகள் தவிர மற்ற சுதேச அரசுகள் அனைத்தும் "இணைப்புறுதி ஆவணத்தில்" (Instrument of Accession) கையெழுத்திட்டு இந்தியாவின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன.
- சுதேச அரசுகளை இந்தியாவோடு இணைக்கும் பணியை அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் படேல் திறம்பட செய்து முடித்தார்.

**(ii) ஹைதராபாத் இணைப்பு**

- ஹைதராபாத் நிஜாம் "விடுதலை பிரகடனம்" செய்த 48 மணி நேரத்திற்குள் இந்தியா காவல்துறை நடவடிக்கைகளை அங்கு தொடர்ந்தது.
- ஹைதராபாத் நிஜாம் மற்றும் அவரது இராணுவமான "இராசாக்கர்கள்" மீது தங்கள் கோபத்தை வெளிப்படுத்தி, "தெலுங்கானா மக்கள் இயக்கத்தை கம்யூனிஸ்டுகள்" வழி நடத்தினர்.
- இதன் காரணமாக ஹைதராபாத் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்து இந்தியாவுடன் இணைக்கப்பட்டன.

**(iii) காஷ்மீர் இணைப்பு**

- 1946 முதலே சர்தார் வல்லபாய் படேல் காஷ்மீர் மகாராஜாவோடு பேச்சு வார்த்தை நடத்திய போதிலும்,
- காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் இந்தியாவுடன் இணைய மறுத்து வந்தார்.
- இந்திய விடுதலைக்குப் பின் பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரை சூறையாடியபோது மகாராஜா ஹரிசிங் அவர்களால் தடுக்க முடியவில்லை.
- காஷ்மீர் அரசருக்கு உதவுவதற்கு இந்திய இராணுவம் அனுப்பப்படுவதற்கு முன் அரசர் "இணைப்புறுதி ஆவணத்தில்" கையெழுத்திட வேண்டும் என்பதில் படேல் உறுதியாக இருந்தார்.
- இதன் விளைவாக காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியானது.

**(iv) ஜுனாகத்**

- ஜுனாகத் பொது வாக்கெடுப்பின் மூலமாக இந்தியாவோடு இணைக்கப்பட்டது.

*10. முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.*

**(i) முதலாவது ஐந்தாண்டு திட்டம்**

- முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951-56) "வேளாண்மையை" வளர்ப்பதிலும், குறிப்பாக வேளாண் உற்பத்தியிலும் கவனம் செலுத்தியது.
- மொத்த முதலீட்டில் 31 விழுக்காடுகள் வேளாண்மைக்கும், நீர்ப் பாசனத்திற்கும் ஒதுக்கப்பட்டது.
- இதற்கு பின்னர் தொழில்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

**(ii) இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்**

- இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் (1956-61) "மகலனோபிஸ் திட்டம்" என அறியப்படுகிறது.
- பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கு "கனரகத் தொழிற்சாலை"களுக்கு முக்கியத்துவம் வழங்கியது.
- "தொழில்துறையின்" பங்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 24% உயர்ந்தது.

**(iii) சாதனைகள்**

- முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் ஓரளவிற்கு "4% வளர்ச்சி"யை இலக்காக கொண்டிருந்தன.

- **இதை பொருளாதார நிபுணர்கள் "இந்து வளர்ச்சி விகிதம்" என அழைத்தனர்.**
- **ஓரளவு வளர்ச்சி விகிதங்கள் அடையப்பட்டதால் அவை "வெற்றிபெற்ற திட்டங்களாக" கருதப்பட்டன.**

### *11. அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்களை விவரி?*

## I. அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள்

### (i) நாவாய் சட்டங்கள்

- **"நாவாய் சட்டங்கள்" எனும் சட்டங்கள் மூலமாக இங்கிலாந்து தனது காலனி நாடுகளின் அனைத்துப் பொருட்களும் "ஆங்கிலக் கப்பல்களின்" மூலமாகவே ஏற்றுமதி செய்யப்படவேண்டுமென கட்டாயப்படுத்தியது.**

### (ii) ஏழாண்டுப் போர்

- **"ஏழாண்டுப் போரின்" முடிவில் கனடாவை இங்கிலாந்து கைப்பற்றியது இதனால் பிரெஞ்சுக்காரர்கள் குறித்த அச்சம் நீங்கியது.**
- **இதனால் இங்கிலாந்தின் கட்டளைகளுக்கு காலனி நாடுகள் அடிபணிய மறுத்தன.**

### (iii) காலனி நாடுகளின் மீதான வரிவிதிப்பு

- 1764-**இல் "சர்க்கரை"யின் மீதும், "சர்க்கரைப் பாகின்" மீதும் வரி விதிக்கப்பட்டது.**
- **இதனால் குறியேற்ற நாடுகள் "பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை" எனும் முழக்கத்தை எழுப்பி எதிர்த்தன.**

### (iv) முத்திரைச் சட்டம்

- 1765-**இல் "முத்திரைகள்" மீதான புதிய வரிச்சட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டது.**

### (v) டவுன்ஷெண்ட் சட்டம்

- 1766-**இல் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சில பண்டங்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டது.**
- **"டவுன்ஷெண்ட்" என்ற இங்கிலாந்து நிதியமைச்சர் இச்சட்டத்தை நடைமுறைப் படுத்தியதால் அவர் பெயரிலேயே இச்சட்டம் "டவுன்ஷெண்ட் சட்டம்" என அழைக்கப்பட்டன.**

### (vi) பாஸ்டன் படுகொலை

- 1770-**இல் இங்கிலாந்தின் புதிய பிரதமரான நார்த்பிரபு தேயிலையின் மீதான வரியை தவிர ஏனைய வரிகளை நீக்கினார்.**
- **"பாஸ்டன்" நகர வீதிகளில் ஆங்கில படைகள் அணிவகுத்து சென்றபோது அமெரிக்கர்கள் ஆங்கிலேயரை விமர்சனம் செய்தனர்.**
- **சினம் கொண்ட ஆங்கிலப் படைகள் அமெரிக்க மக்களுக்கு எதிராக துப்பாக்கி சூடு நடத்தின.**
- **இதுவே "பாஸ்டன் படுகொலை" எனப்பட்டன.**

### (vii) பாஸ்டன் தேநீர் விருந்து

- **"பாஸ்டன் படுகொலை"யை தொடர்ந்து "பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம்" தரித்த** 100 **கிளர்ச்சியாளர்கள்.**
- **பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலையை கொண்டுவந்த மூன்று கப்பல்களில் ஏறி** 342 **பெட்டிகளை கடலுக்குள் வீசி எறிந்தனர்.**
- **இந்நிகழ்வு "பாஸ்டன் தேநீர் விருந்து" என அழைக்கப்பட்டது.**

12. *தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?*

## (I) தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஏற்படக் காரணம்

### (i) வணிகப் புரட்சியின் தாக்கம்

❖ வியாபார, வணிகத் துறைகளில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்கள் "முதலாளிகள்" எனும் புதிய வர்க்கத்தை உருவாக்கியது.

❖ அவர்கள் தங்களிடமிருந்த உபரிச்செல்வத்தை முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை தேடினர்.

### (ii) காலனி ஆதிக்கம்

❖ "இங்கிலாந்து" கடல் கடந்த காலனிகளை உருவாக்கும் போட்டியில் "மேலாதிக்கம்" பெற்றது.

❖ உலகின் "நான்கில் ஒரு பகுதி இங்கிலாந்தின் காலனி"களாக இருந்தன.

### (iii) சந்தைகளின் விரிவாக்கம்

❖ இங்கிலாந்தில் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்றவாறு சந்தைகளும் விரிவடைந்தன.

### (iv) அரசியல் உறுதித் தன்மை

❖ இங்கிலாந்து மிகவும் தாராளத் தன்மை கொண்ட நாடாக இருந்தது.

❖ அதன் அரசியல் உறுதித் தன்மை "தொழில் வளர்ச்சிக்கு" சாதகமானது.

### (v) மூல வளங்கள்

❖ நிலக்கரி, இரும்பு போன்ற மூல வளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்ததென்பது தொழிற்புரட்சிக்கு முக்கிய காரணமாகும்.

### (vi) வேளாண்மையில் ஏற்பட்ட முன்னேற்றம்

❖ தொழிற்புரட்சிக்கு முன்பு வேளாண்மையிலும் இங்கிலாந்து விரைவான முன்னேற்றம் கண்டது.

❖ பயிர் சுழற்சி முறை, பண்ணை முறை, இயந்திரமயமாக்கல் ஆகியவற்றின் மூலம் வேளாண்மை உற்பத்தி அதிகமானது.

### (vii) கடற்கரைப் பகுதியில் ஆதிக்கம்

❖ இங்கிலாந்து தனது கடற்கரைப் பகுதி முழுவதிலும் துறைமுகங்களை கொண்டிருந்தது.

❖ அது உள்நாட்டு, பன்னாட்டு வணிகத்தை எளிதாக்கியது.

### (viii) தட்பவெப்பநிலை

❖ இங்கிலாந்து தீவுகளில் நிலவிய மிதமான தட்பவெப்பநிலை "பருத்தி இழைத்துணி" உற்பத்திக்கு உகந்ததாக இருந்தது.

## (II) நவீன சமூகத்தின் மீது தொழிற்புரட்சியின் தாக்கம்

❖ ஆலைகள் இயந்திரமயமானதின் விளைவாக உற்பத்தி மிகப் பெருமளவிற்கு பெருகியது.

❖ கைவினைத் தொழில்கள் அழித்தன.

❖ ஆயிரக்கணக்கான கைவினைஞர்களும், நெசவாளர்களும் வேலையற்றவர்களாயினர்.

❖ தொழிற்சாலைகளில் அதிகமான பெண்கள், குழந்தைகள் ஆகியோரிடமிருந்து மலிவான விலையில் உழைப்பு பெறப்பட்டது.

❖ இதனால் உடல் வலுமிக்க ஆண்கள் வேலையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

❖ "முதலாளிகள்", "தொழிலாளிகள்" என இரண்டு வர்க்கங்கள் உருவாக்கப்பட்டது.

## 13. இத்தாலி இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?

(i) பிரான்சில் ஏற்பட்ட புரட்சிகளின் தாக்கம்
(ii) மாஸினி
(iii) கவுண்ட் கவூர்
(iv) ஆஸ்திரியாவுடன் போர்
(v) கரிபால்டி
(vi) இத்தாலிய இணைவு

**(i) பிரான்சில் ஏற்பட்ட புரட்சிகளின் தாக்கம்**

- 1830, மற்றும் 1848-இல் பிரான்சில் ஏற்பட்ட புரட்சியின் சாயலில் இத்தாலிய மாநிலங்களில் மக்களின் கிளர்ச்சிகள் வெடித்தன.
- இதனால் "சார்லஸ் ஆல்பர்ட்" பதவி விலகி, "இரண்டாம் விக்டர் இம்மானுவேல்" அரசரானார்.

**(ii) மாஸினி**

- "மாஸினி" இத்தாலிய ஒருங்கிணைவிற்கு அடித்தளமிட்டார்.
- ஆரம்பத்தில் கார்பொனாரியின் கலகத்தில் செயல்பாடுகளில் தொடர்பு கொண்டிருந்ததற்காக அவர் கைது செய்யப்பட்டார்.
- பின்னர் 1831-இல் "இளம் இத்தாலி இயக்கத்தை" துவங்கினார்.
- போப்பாண்டவர் வெளியேற்றப்பட்டு குடியரசு பிரகடனப் படுத்தப்பட்ட பின் மூவரடங்கிய நிர்வாகக் குழுவில் மாஸினியும் பங்கு பெற்றார்.

**(iii) கவுண்ட் கவூர்**

- "இல் ரிசார்ஜிமென்டோ" என்ற செய்தித்தாளை கவூர் பிரசுரித்தார்.
- இது இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வு ஏற்றம்பெற உதவியது.
- கவூர் "சார்டினியாவின் பிரதம அமைச்சராக"ப் பதவியேற்று இத்தாலிய ஒருங்கிணைப்பிற்கு பாடுபட்டார்.
- பிரான்சின் மூன்றாம் நெப்போலியனோடு இவர் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி பிரான்சு நாடு ஆஸ்திரியாவிற்கு எதிராக இத்தாலிக்கு உதவும் என்று கூறப்பட்டது.

**(iv) ஆஸ்திரியாவுடன் போர்**

- 1859-இல் ஆஸ்திரியா தனது தாக்குதலை பியட்மான்ட் -சார்டினியப் படைகள் மீது தொடுத்தது.
- பிரான்சின் படைகளோடு இணைந்து ஆஸ்திரியாவை தோற்கடித்தன.
- ஆனால் "வில்லா-ஃபிராங்கோ உடன்படிக்கை"யின்படி மூன்றாம் நெப்போலியன் ஆஸ்திரிய பேரரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.
- "கவூர்" மீண்டும் 1860 பிரதம அமைச்சராக பதவியேற்றார்.

**(v) கரிபால்டி**

- கரிபால்டி "கொரில்லா போர்முறை" உத்தியை கைக்கொண்டு இத்தாலியின் ஒருங்கிணைப்பிற்கு முக்கிய பங்காற்றினார்.
- மாஸினியின் "இளம் இத்தாலி இயக்கத்தில்" சேர்ந்து உத்வேகம் அடைந்தார்.
- "இத்தாலியப் படையணி" என்ற அமைப்பை உருவாக்கினார்.
- இப்படை அமைப்பு "செஞ்சட்டையினர்" என்று அழைக்கப்பட்டனர்.
- 1000 தன்னார்வலர்களோடு "ஜெனோவா" துறைமுகத்திலிருந்து கிளம்பி சிசிலியை சென்றடைந்தார்.

- அங்கு 20,000 படைவீரர்களை கொண்ட நேப்பிள்சின் படைப்பிரிவை தோற்கடித்தார்.
- தனது படையெடுப்பின் வெற்றியை மன்னர் இரண்டாம் விக்டர் இமானுவேலிடம் சமர்ப்பித்தார்.

**(vi) இத்தாலிய இணைவு**

- 1871-இல் நடந்த பிராங்கோ - பிரஷ்யப் போரில் பிரெஞ்சுப் படைகள் ரோம் நகரை விட்டு அகன்றதால் இத்தாலி ரோமை இணைத்துக் கொண்டது.
- இவ்வாறு "இத்தாலிய இணைவு" முழுமைப் பெற்றது.

*14. "ஒருங்கிணைந்த ஜெர்மனியின் உண்மையான வடிவமைப்பாளர் பிஸ்மார்க்கே" என ஏன் சொல்லப்படுகிறது?*

(i) பிஸ்மார்க்
(ii) ஷ்லெஸ்விக் - ஹால்ஸ்டின் சிக்கல்
(iii) ஆஸ்திரிய - பிரஷ்யப் போர்
(iv) பிராங்கோ - பிரஷ்யப் போர்
(v) ஜெர்மானிய ஒருங்கிணைவு

**(i) பிஸ்மார்க்**

- பிரஷ்யாவின் பிரதம அமைச்சர் பதவி வகித்த "ஆட்டோ வான் பிஸ்மார்க்" ஆவார்.
- இவர் பிரஷ்யாவின் தலைமையில் "ஜெர்மானியப் பகுதிகள்" ஒருங்கிணைக்கப் படவேண்டுமென்ற நோக்கோடு வலுப்படுத்தினார்.

**(ii) ஷ்லெஸ்விக் - ஹால்ஸ்டின் சிக்கல்**

- "ஷ்லெஸ்விக்கும்", "ஹோல்ஸ்டி"னும் டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் இருந்த இரு ஜெர்மானிய மாநிலங்களாகும்.
- பிஸ்மார்க், ஆஸ்திரியாவுடன் இணைந்து டென்மார்க்கை எதிர்க்க முன்மொழிந்தார்.
- 1864-இல் ஆஸ்திரியா-பிரஷ்யாவின் கூட்டுப்படைகள் டென்மார்க்கை தோற்கடித்தன.
- "வியன்னா உடன்படிக்கை"யின் கீழ் டென்மார்க் அவ்விரு பகுதிகளையும் பிரஷ்யா - ஆஸ்திரியாவிடம் ஒப்படைத்தது.

**(iii) ஆஸ்திரியா - பிரஷ்யப் போர்**

- ஹால்ஸ்டின் பகுதியை பெறுவதில் ஏற்பட்ட சிக்கலால் பிரஷ்யப் படைகளை ஹால்ஸ்டினுக்கு அனுப்பி பிஸ்மார்க் அதனை முற்றுகையிட்டார்.
- இவ்வாறு தொடங்கிய ஆஸ்திரிய-பிரஷ்யப் போர் " 7-வாரப் போர்" என்றும் குறிப்பிடப்படுகிறது.
- இறுதியில் பிரஷ்யப் படைகள் "சடோவா போரில்" ஆஸ்திரியாவை தோற்கடித்தது.
- "பிரேக் உடன்படிக்கை" மூலம் போருக்கு முடிவு காணப்பட்டது.

**(iv) பிராங்கோ - பிரஷ்யப்போர்**

- பிரெஞ்சு வெளியுறவு அமைச்சரும், பிரஷ்ய மன்னருக்கும் இடையே "எம்ஸ் நகரில் நடந்த சந்திப்பில் உடன்பாடு" ஏற்பட்டது.
- இது குறித்து பிரஷ்ய மன்னர் பிஸ்மார்க்கிற்கு தந்தி அனுப்பினார்.
- இந்த தந்தியை பிஸ்மார்க் மாற்றியமைத்தார்.
- எம்ஸ் தந்தி "பிராங்கோ - பிரஷ்யப் போர்" தோன்ற வழிவகுத்தது.
- "செடானில்" நடந்த போரில் பிரான்சு தோல்வியடைந்தது.

**(v) ஜெர்மானிய ஒருங்கிணைவு**

- "வெர்செய்ல்ஸ் அரண்மனை"யில் பிரஷ்ய மன்னர் வடக்கு தெற்கு ஜெர்மானிய மாகாணங்களுக்கு மன்னராக அறிவிக்கப்பட்டார்.

- ❖ இவ்வாறு "பிஸ்மார்க்" இராஜதந்திர உத்திகளும், போர் நடவடிக்கைகளையும் கொண்டு ஜெர்மானிய ஒருங்கிணைவை ஏற்படுத்தினார்.

## 15. முதல் உலகப்போரின் காரணங்களை விவரி?

(i) கூட்டணி முறையின் பரிணாமம்
(ii) மொராக்கோ சிக்கல்
(iii) போஸ்னிய சிக்கல்
(iv) பால்கன் போர்கள்
(v) உடனடிக் காரணம்

### (i) கூட்டணி முறையின் பரிணாமம்

- ❖ ஐரோப்பாவில் கூட்டணி முறையை வடிவமைத்தவர் "பிஸ்மார்க்" ஆவார்.
- ❖ பிரான்சை தனிமைப் படுத்த தீர்மானித்து கூட்டணியை தொடங்கினார்.
- ❖ ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளை இணைத்து "மூன்று பேரரசுகள் கழகத்தை" பிஸ்மார்க் உருவாக்கினார்.
- ❖ பின்னர், இக்கூட்டணியில் இத்தாலி இணைந்ததால் "மூவர் கூட்டணி" ஆக விரிவடைந்தது.
- ❖ 1907-இல் பிரிட்டன் ரஷ்யாவோடு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.
- ❖ பின்னர், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் அங்கமாக கொண்டு "முக்கூட்டு நட்பு" உருவாக்கப்பட்டது.

### (ii) மொராக்கோ சிக்கல்

- ❖ மொராக்கோவின் "ஃபெஸ் நகருக்கு" பிரான்சின் தூதுக்குழு வந்தடைந்தது அதனை பிரான்சின் பகுதியாக கருதி செயல்பட்டது.
- ❖ இதற்கு ஜெர்மனி தனது எதிர்ப்பை தெரிவித்தது.
- ❖ இச்சர்ச்சை ஐரோப்பிய மாநாடுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் எந்த பலனும் ஏற்படவில்லை.
- ❖ பின்னர் ஜெர்மானியர்கள் மொராக்கோவின் துறைமுகமான "அகாதிர்" பகுதிக்கு துப்பாக்கி பொருந்திய படகான "பேந்தரை" அனுப்பினர்.

### (iii) போஸ்னிய சிக்கல்

- ❖ ஆஸ்திரியாவின் பாதுகாப்பில் இருந்த போஸ்னியா, ஹர்சிகோவினா பகுதிகளை ஆஸ்திரியா - ஹங்கேரி இணைப்பதாக அறிவித்தது.
- ❖ இதனால் தொடர் சிக்கல்கள் ஏற்பட்டது. துருக்கியர்கள் சினமடைந்தார்கள்.
- ❖ கொந்தளிப்பிற்குள்ளான செர்பியா, ரஷ்யாவிடம் உதவி கோரியது.
- ❖ ஆனால் ஜப்பானுடன் நடத்திய போரின் பாதிப்பில் ரஷ்யா இருந்ததால் இதில் தலையிட விரும்பாமல் இருந்தது.

### (iv) பால்கன் போர்கள்

- ❖ துருக்கியின் செல்வாக்கு பால்கன் பகுதிகளில் விரிந்து ஹங்கேரி முதல் போலந்து வரை சென்றது.
- ❖ "முதலாம் பால்கன் போரில்" ஐரோப்பிய மாகாணங்களில் இருந்து துருக்கியர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள்.
- ❖ "மாசிடோனி"யாவை ஆக்கிரமிக்க ரஷ்யா, கிரீஸ், செர்பியா, பல்கோரியா போன்ற நாடுகளால் "பால்கன் ஐக்கியம்" உருவாக்கப்பட்டது.
- ❖ "லண்டன் உடன்படிக்கை"யின்படி மாசிடோனியா பிரிக்கப்பட்டு 'அல்பேனியா" என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.
- ❖ "இரண்டாம் பால்கன் போர்" "புக்காரெஸ்ட் உடன்படிக்கை" மூலம் முடிவுக்கு வந்தது.

**(v) உடனடிக் காரணங்கள்**

- ❖ ஆஸ்திரிய-ஹங்கேரியின் பேரரசரின் வாரிசான ஆர்ச் டியூக் ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட் 1914-ஜூன் 28-இல் செர்பிய நாட்டைச் சேர்ந்த பிரின்சிப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.
- ❖ ஒரு மாத காலத்தில் இறுதியறிக்கை ஒன்றினை அளித்து செர்பியா சரணடைய ஆஸ்திரியா வலியுறுத்தியது.
- ❖ செர்பியா கொடுத்த விளக்கத்தையும், ஜெர்மனி மேற்கொண்ட மத்தியஸ்தம் முயற்சியையும் ஆஸ்திரியா புறந்தள்ளியது.
- ❖ ஆஸ்திரியா 1914 ஜூலை 28 அன்று "செர்பியா" மீது போர் பிரகடனம் செய்தது

*16. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியை பொறுத்தமட்டில் கடுமையான தாகவும் அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது - இக்கூற்றினுக்கான ஆதாரப் பின்புலத்தை உறுதிப்படுத்துக.*

**(i) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம்**

- ❖ முதல் உலகப்போரின் முடிவில் கூடிய "பாரிஸ் அமைதி மாநாட்டில்" ஜெர்மனிய நாட்டுடன் "வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம்" 1919-ல் ஏற்றுக்கொள்ளக் கட்டாயப் படுத்தப்பட்டது.

**(ii) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகள்**

- ❖ அல்சேசையும், லொரனையும் ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்.
- ❖ "சார் பள்ளத்தாக்கின்" நிலக்கரி சுரங்கங்கள் பிரான்சிடம் வழங்கப்பட வேண்டும்.
- ❖ "ரைன் பள்ளத்தாக்கில்" அரண் அமைக்கவோ அல்லது படைகளை குவிக்கவோ ஜெர்மனிக்கு தடை விதிக்கப்பட்டது.
- ❖ ஜெர்மனி நிராயுதபாணியாக்கப்பட்டு அதன் நீர்மூழ்கி கப்பல்களையும், போர்க் கப்பல்களையும் இழக்க நேரிட்டது.
- ❖ இராணுவம் பயன்பாட்டிற்காகவோ, கப்பற்படையின் தேவைக்கென்றோ, ஜெர்மனி விமானங்களை கொண்டிருக்க கூடாது என கூறப்பட்டது.
- ❖ தரைப்படையின் அதிகாரிகள், பிற பணியாளர்கள் சேர்ந்து 1,00,000 என்ற எண்ணிக்கையை தாண்டக் கூடாது என்று வரையறுக்கப்பட்டது.
- ❖ ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க ஜெர்மனி வற்புறுத்தப்பட்டது.
- ❖ ஜெர்மானியப் பேரரசு இரண்டாம் வில்லியம் மீது நன்னடத்தையை மீறியமை, ஒப்பந்தங்களின் புனித தன்மையை மதிக்க தவறியமை போன்ற குற்றங்கள் அவர் மீது சுமத்தப்பட்டது.
- ❖ அவரை ஒரு தீர்ப்பாயத்தின் மூலம் விசாரிக்க முடிவு செய்யப்பட்டது.

*17. இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.*

**(i) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம்**

- ❖ "முதல் உலகப்போரின்" முடிவில் "பாரிஸ் அமைதி மாநாடு" 1919-இல் நடைபெற்றது.
- ❖ அம்மாநாட்டில் ஜெர்மனியுடன் நேசநாடுகள் "வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம்" செய்தது.
- ❖ வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துக்களை ஜெர்மானிய அரசு ஏற்றுக் கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டது.

**(ii) அமைதி உடன்படிக்கையின் நியாயமற்ற தன்மை**

- ❖ ஜெர்மனியின் கட்டுப்பாட்டில் இருந்த காலனிய நாடுகள் பிரித்தெடுக்கப் பட்டதால் அதன் படையளவு மோசமாக சுருங்கியது.
- ❖ "அல்சேஸ் மற்றும் லொரைன்" பகுதிகளை பிரான்சிடம் விட்டுக் கொடுக்கவும்,

- ❖ சார் பள்ளத்தாக்கில் அந்நாடு தாற்காலிகமாகப் படைகளை நிறுத்திக் கொள்ளவும் ஜெர்மனி ஒப்புதல் வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டது .
- ❖ தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான "சைலேசியா"வை போலந்திடம் ஒப்படைக்கவும் ஜெர்மனி கட்டாயப்படுத்தப்பட்டது.
- ❖ செலுத்தவே இயலாத ஒரு தொகையாக "6,600 மில்லியன் பவுண்டுகள்" போர் இழப்பீடாக ஜெர்மனியிடம் கோரப்பட்டது.
- ❖ இத்தகைய முக்கிய கூறுகள் தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்குள் எண்ண அலை ஏற்பட்டது.
- ❖ அதன் பின் தொடர்ச்சியாக நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழிவகுத்தது.
- ❖ ஜெர்மனிக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தை துடைத்தெறிய அதன் மக்கள் துடித்தனர்.
- ❖ இவ்வாறு இரண்டாம் உலகப்போருக்கான "விதை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தில்" தூவப்பட்டது.

18. *அரபு-இஸ்ரேலில் முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967-இல் பெரும் போர் ஏற்பட காரணமாயிற்று என்பதை விளக்கவும்.*

**(i) பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டது**

- ❖ 1947-இல் "பாலஸ்தீனம்", "அராபியர்" நாடு, யூதர்கள் நாடு என இரண்டாக பிரிப்பதற்கு "ஐ.நா. சபை முடிவு" செய்தது.
- ❖ இதனால் அராபியர்களுக்கும், யூதர்களுக்கும் இடையே போர் மூண்டது.

**(ii) இஸ்ரேல் சுதந்திர நாடாக அறிவிப்பு**

- ❖ பாலஸ்தீனத்திலிருந்து ஆங்கில படைகள் வெளியேறிய பின்னர் இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது.
- ❖ 1949-இல் இஸ்ரேல் "ஐ.நா. சபை" யில் உறுப்பினரானது.

**(iii) ஐ.நா.சபையின் ஈடுபாடு**

- ❖ "இஸ்ரேல்" உருவாக்கப்பட்டதன் தொடக்கத்திலிருந்தே ஐ.நா. சபை அரசியல் முடிவுகள் எடுப்பதில் ஈடுபாடு கொண்டது.
- ❖ ஐ.நா.சபையின் அமைதிகாக்கும் படை "எகிப்து-இஸ்ரேல்" எல்லையில் முகாமிட்டிருந்தது.

**(iv) அமெரிக்கா போர் தளவாடங்கள் உதவி**

- ❖ இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்களையும், ஏவுகணைகளையும் அமெரிக்கா வழங்க தொடங்கியது.
- ❖ இதன் விளைவாக "பனிப்போர்" மத்திய கிழக்கில் தோன்றியது.

**(v) இஸ்ரேல் - எகிப்து போர்**

- ❖ 1967-இல் "டைரன் நீர்சந்தி" வழியாக இஸ்ரேலின் கப்பல்கள் பயணிக்க எகிப்து தடைவிதித்தது.
- ❖ இதனை எதிர்த்து இஸ்ரேல் எகிப்தை தாக்கியது, "கெய்ரோ" நகரின் விமானப்படை முற்றிலுமாக அழிக்கப்பட்டன.
- ❖ மேலும், எகிப்தின் "சினாய் பகுதி"களையும் இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது.
- ❖ பாலஸ்தீனப் பிரச்சனையானது அகதிகள் பிரச்சனை என்ற கோணத்தில் மட்டுமே அனுப்பப்பட்டது.
- ❖ இஸ்ரேலிய படைகள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து பாலஸ்தீனியர்கள் வெளியேற வேண்டுமென ஐ.நா.சபை தீர்மானம் நிறைவேற்றியது.

# இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள்

## (1900 - 1950)

### காலக்கோடு

அளவுதிட்டம்
1 அலகு = 10 ஆண்டுகள்

1900

- 1905 - வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்
- 1906 - முஸ்லீம் லீக்
- 1907 - சூரத் பிளவு
- 1909 - மிண்டோ - மார்லி சீர்திருத்தம்

1910

- 1911 - மாவட்ட ஆட்சியர் ஆஷ் படுகொலை
- 1914 - அனைத்திந்திய இந்து மகாசபையின் தோற்றம்
- 1915 - இந்து மகாசபையின் முதலாவது மாநாடு ஹரித்துவாரில் நடைபெறல்
- 1916 - தன்னாட்சி இயக்கம் / லக்னோ உடன்படிக்கை
- 1917 - சம்பரான் இயக்கம்
- 1919 - ரௌலட் சட்டம் / ஜாலியன் வாலாபாக் படுகொலை / மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தம்

1920

- 1920 - ஒத்துழையாமை இயக்கம்
- 1921 - மலபார் கலகம்
- 1922 - சௌரி சௌரா நிகழ்ச்சி

1930

- 1930 - தண்டி யாத்திரை/ உப்பு சத்தியாகிரகம்/சட்டமறுப்பு இயக்கம்
- 1931 - காந்தி - இர்வின் ஒப்பந்தம்
- 1932 - வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு / பூனா ஒப்பந்தம்
- 1937 - மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை

1940

- 1940 - ஆகஸ்ட் கொடை / லாகூர் தீர்மானம்
- 1942 - கிரிப்ஸ் தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்
- 1945 - வேவல் திட்டம் / சிம்லா மாநாடு
- 1946 - அமைச்சரவைத் தூதுக்குழு / நேரடி நடவடிக்கை / இடைக்கால அரசாங்கம்
- 1947 - இந்தியா விடுதலை அடைதல்


1950

- 1950 - இந்தியா குடியரசு நாடாக மாறுதல்

# அமெரிக்க விடுதலைப் போரில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

**காலக்கோடு**


அளவுதிட்டம்
1 அலகு = 10 ஆண்டுகள்



# பிரெஞ்சுப் புரட்சியின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

## காலக்கோடு


அளவுதிட்டம்
1 அலகு = 10 ஆண்டுகள்



# முதல் உலகப்போரின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

**காலக்கோடு**


அளவுதிட்டம்
1 அலகு = 10 ஆண்டுகள்




# இரண்டாம் உலகப்போரின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

## காலக்கோடு

அளவுதிட்டம்
1 அலகு = 10 ஆண்டுகள்






இந்திய தேசிய காங்கிரஸ்
மாநாடுகள் 1885-1947
வ
மே
கி
தெ
லாகூர் 1893 1900 1909 1929
அமிர்தசரஸ் 1919
மீரட் 1946
டெல்லி 1918
1923
1932
1947
லக்னோ 1899 1916 1936
கான்பூர் 1925
அலகாபாத் 1888 1892 1910
பனாரஸ் 1905
பாட்னா 1912
கயா 1922
ராம்கர் 1940
கவுகாத்தி 1926
கராச்சி 1913 1931
அகமதாபாத் 1902 1921
திரிபுரி 1939
ஹரிபுரா 1938
பெய்ஸ்பூர் 1937
சூரத் 1907
நாக்பூர் 1891 1920
அமராவதி 1897
கல்கத்தா 1886 1890 1896 1901 1906 1911 1917 1920 1928 1933
பம்பாய் 1885 1889 1904 1915 1918 1934 1942
பூனா 1895
பெல்காம் 1924
காக்கிநாடா 1923
சென்னை 1887 1894 1898 1903 1908 1914 1927
அளவையில் இல்லை
மாநாடு நடைபெறாத ஆண்டுகள்
1930, 1935, 1941-1945

## விடுதலைப் போராட்டத்தில் மக்களை ஒன்றிணைத்தல்




| | |
|---|---|
| ஜாலியன் வாலாபாக் (பஞ்சாப்) | ஜாலியன் வாலாபாக் படுகொலை |
| சௌரி சௌரா (உத்திரப் பிரதேசம்) | ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தம் |
| தண்டி (குஜராத்) | சட்ட மறுப்பு இயக்கம் |
| சம்பரான் (பீகார்) | அவுரி விவசாயிகள் இயக்கம் |
| கேதா (குஜராத்) | விவசாயிகள் சத்தியாகிரகம் |
| அகமதாபாத் (குஜராத்) | பருத்தி ஆலை தொழிலாளர்கள் சத்தியாகிரகம் |
| மஹத் (மகாராஷ்டிரா) | மஹத் சத்தியாகிரகம் |


புதிய கடல்வழிகள் கண்டுபிடிப்பு
வ
மே
கி
தெ
ஆர்டிக் பெருங்கடல்
கிரீன்லாந்து
கனடா
வட
அமெரிக்கா
மெக்சிகோ
பசிபிக் பெருங்கடல்
இங்கிலாந்து
பிரிஸ்டல்
போர்த்துகல்
லிஸ்பன்
ஐரோப்பா
செவில்லே
பாலோஸ்
பஹாமா
தீவுகள்
அட்லாண்டிக்
பெருங்கடல்
வெர்டி முனை
தீவுகள்
ஆசியா
இந்தியா
கோவா
கோழிக்கோடு
ஆப்பிரிக்கா
மலிந்தி
மோம்பாசா
மொசாம்பிக்
இந்தியப்
பெருங்கடல்
பிலிப்பைன்ஸ்
தீவுகள்
பசிபிக் பெருங்கடல்
ஆஸ்திரேலியா
நன்னம்பிக்கை முனை
தென்
அமெரிக்கா
மெகல்லன்
ஜலசந்தி
ஸ்பெயின்
போர்த்துகல்
கொலம்பஸ்
வாஸ்கோடகாமா
மெகல்லன்
கேபட்


இரண்டாம் உலகப்போரின் போது உலகம்
ஆர்டிக் பெருங்கடல்
ஆர்டிக் பெருங்கடல்
அட்லாண்டிக் பெருங்கடல்
பசிபிக் பெருங்கடல்
பசிபிக் பெருங்கடல்
இந்தியப் பெருங்கடல்
சோவியத் ரஷ்யா
அமெரிக்க ஐக்கிய நாடுகள்
இந்தியா
சீனா
ஜப்பான்
ஜெர்மனி
பிரான்ஸ்
பிரிட்டன்
இத்தாலி
நெதர்லாந்து
பெல்ஜியம்
டென்மார்க்
நேச நாடுகள்
அச்சு நாடுகள்